விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 152 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 06 செவ்வாய்க்கிழமை (20.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ராஜபக்ஷக்கள் யுத்தக் குற்றவாளிகள்
## மனித குலத்துக்கு எதிரான அவர்களின் குற்றத்துக்கு பொறுப்புக்கூறும் நாளை எதிர்பார்க்கின்றோம்



### மே 18 நினைவேந்தலை முன்னிட்டு பிரம்டன் மேயர் அறிக்கை

(ஒட்டாவா)

ராஜபக்ஷக்கள் யுத்தக் குற்றவாளிகள். மனித குலத்துக்கு எதிரான அவர்களின் குற்றத்துக்குப் பொறுப்புக்கூறும் நாளை எதிர்பார்க்கின்றோம் என கனடாவின் பிரம்டன் மேயர் பட்ரிக் பிறவுண் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ள

15ஆம் பக்கம் பார்க்க

# உண்மையான சமாதானம் நிலைநாட்டப்படவில்லை

## இராணுவ வீரர்கள் நினைவு நிகழ்வில் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)



- யுத்தம் என்பது துயரம். அது நாட்டில் மீண்டும் ஏற்பட இடமளியேன்.
- வடக்கிலும் தெற்கிலும் அதிகாரத்தைக் கைப்பற்ற இனவாதம் தலைதூக்கியுள்ளது.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த தினத்தை நினைவுகூரும் நிகழ்வு நேற்று பிற்பகல் பத்தரமுல்ல, படை வீரர்கள் நினைவிடத்திற்கு முன்பாக, முப்படைகளின் தளபதி, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்.

16ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் இராணுவ முகாம்களை அகற்றக்கூடாது
### சரத் பொன்சேகா

(கொழும்பு)

வடக்கில் இராணுவ முகாம்களை அகற்றக்கூடாது என

02ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் மழை, மின்னல் தாக்கத்தினால்
### 17 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

நிலவும் அசாதாரண கால நிலை காரணமாக ஏற்பட்ட மழை மற்றும் மின்னல் தாக்கத்தினால் யாழில் 17 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்

15ஆம் பக்கம் பார்க்க

## அசைவ உணவகத்தை மூடுக
### நல்லூர் ஆலய முன்றலில் இன்று மாலை கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் அருகே திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தை மூட வலியுறுத்தி சைவ அமைப்புக்களின் ஏற்பாட்டில் இன்று கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்பாக இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

நல்லூரான் உற்சவ வளாகத்தில்

15ஆம் பக்கம் பார்க்க

## நீதியையும் பொறுப்புக்கூறலையும் அநுர அரசு நிலைநாட்டுமா?
### சர்வதேச மன்னிப்புச் சபை கேள்வி

(லண்டன்)

AMNESTY INTERNATIONAL

இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் போர்க்குற்றங்கள் இடம் பெறவில்லை என மறுத்துவந்திருப்பதுடன், அவை தொடர்பில் நம்பத்தகுந்த விசா

15ஆம் பக்கம் பார்க்க

## மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் உயிரிழப்பு
### நீர்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் ஊரெழு கிழக்கு சுன்னாகத்தைச் சேர்ந்த செல்வராஜா அனிற்றன் (வயது-29) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

கடந்த 11ஆம் திகதி

15ஆம் பக்கம் பார்க்க

## கல்வி முறையை படிப்படியாக மாற்ற நடவடிக்கை
### பிரதமர் ஹரிணி

(கொழும்பு)

நாட்டில் கல்வி முறையை படிப்படியாக மாற்ற நடவடிக்கை

02ஆம் பக்கம் பார்க்க

## முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு
### பிரித்தானியாவில் கவனயீர்ப்பு




15ஆம் பக்கம் பார்க்க

### நிலத்தை இழந்தால் இனத்தை இழப்போம் என்று உணர்ந்து

# அன்னை நிலத்தை மீட்க வந்த மீட்பன் தான் தலைவர் பிரபாகரன்



## மே-18 நிகழ்வில் சீமான் தெரிவிப்பு

(சென்னை)

மொழி அழிந்தால் இனம் நிச்சயம் அழியும். இந்த வரலாற்று உண்மையை உணர்ந்து மொழியை மீட்கவும் காக்கவும் ஒருவன் வந்தான். நிலத்தை இழந்தால் பலத்தை இழப்போம். பலத்தை இழந்தால் இனத்தை இழப்போம் என்பதை உணர்ந்து அன்னை நிலத்தை மீட்க ஒரு மீட்பன் வந்தான். அவன் பெயர் பிரபாகரன் என நாம்தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சி சார்பில் "தமிழினப் பேரெழுச்சி பொதுக் கூட்டம்" கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் மே 18 நடைபெற்றது.

இதில் உரையாற்றும் போதே சீமான் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வரலாற்றில் புறக்கணிக்கப்பட்ட தமிழின மக்கள் சொந்த மண்ணிலேயே அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

மானம், அறம், வீரம் என வாழ்ந்த மறவர் கூட்டம் நாம். கடல் கடந்து நிலப்பரப்பை வென்று உலகத்தின் மூன்றாவது பெரிய வல்லரசை நிறுவிய ராஜராஜ சோழன் வாரிசுகள் நாம். யாரையும் அடிமைப் படுத்தி வாழ்ந்ததாக சரித்திரமே இல்லை. அப்படிப்பட்ட எங்களை சிங்களவன் அடிமைப்படுத்த நினைத்தால் விடுவதற்கு நாங்கள் பூனையோ எலியோ அல்ல... புலிகள்.

மூவேந்தர் வாரிசுகளான நாம் முள்ளிவாய்க்காலில் முடங்கிய நாள் இன்று. பச்சிளம் குழந்தைகள் பாஸ்பரஸ் குண்டுகளுக்கு செத்து மடிந்த நாள். ஈக்களும் எறும்புகளுக்கும் இரக்கம் காட்டியவர்கள் இரக்கமின்றி கொல்லப்பட்ட நாள். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என உலகத்தை தழுவிப் பாடியவர்கள் இரக்கமின்றிக் கொல்லப்பட்ட நாள்.

உலக அறிஞர்களால் நன்கு கட்டமைக்கப்பட்ட ஒரே மொழி தமிழ். தனித்து இயங்கக்கூடிய செம்மொழி. இந்த மொழி அழிந்தால் இனம் நிச்சயம் அழியும். இந்த வரலாற்று உண்மையை உணர்ந்து மொழியை மீட்கவும் காக்கவும் ஒருவன் வந்தான். நிலத்தை இழந்தால் பலத்தை இழப்போம். பலத்தை இழந்தால் இனத்தை இழப்போம் என்பதை உணர்ந்து அன்னை நிலத்தை மீட்க ஒரு மீட்பன் வந்தான். அவன் பெயர் பிரபாகரன்.

தமிழ் பேரினத்தின் வரலாறாகவே வாழ்ந்தான். அவன் வெடித்த முதல் தோட்டா உலகத்தையே அதிர வைத்தது. 200 ஆண்டு களுக்குப் பிறகு என் இனம் எப்படி வாழ வேண்டும் என்று கனவு கண்டான். ஆனால் உலகப் போரால் அந்தக் கனவு நசுக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என்று சொன்னது இந்த ஆட்சியாளர்கள் தான். இனத்தைக் கொன்று குவித்தவர்களுக்கே வரிசையில் நின்று வாக்குச் செலுத்தி அடிமையாக வாழ்கிறோம். போரை நடத்தியது காங்கிரஸ். அவர்களுடன் நின்றவர்கள் திமுக. போராடி நிறுத்த வேண்டிய உயரத்தில் இருந்தவர்கள் அதிமுக. 2ஜி அலைக்கற்றைக்காக பாராளுமன்றத்தை முடக்கிய பாஜக. தமிழினத்தின் எதிரிகள் இவர்கள் நான்கு பேரும் என்றார்.(ம-4,7)

## நிமோனியா காய்ச்சல் தாவடியில் பெண் மரணம்

நிமோனியா காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் தாவடியில் குடும்பப் பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் தாவடி அம்மன் கோவில் பகுதியைச் சேர்ந்த சின்னையா ரஜீனா(வயது 53) என்ற ஐந்து பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண்ணுக்கு உடல் சுகயீனம் ஏற்பட்ட நிலையில் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டது. இருப்பினும் நோய் குணமடையலாம் என்ற நிலையில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். நிமோனியா காய்ச்சல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.(ம-4,7,104)

### மட்டு.மறை மாவட்டத்தின் முதலாவது ஆயர்

## பொன்னையா ஆண்டகை இறைவனடி சேர்ந்தார்



மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் முதலாவது ஆயராக இறைபணியாற்றிய கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை நேற்று திங்கட்கிழமை தனது 74வது வயதில் சுகவீனம் காரணமாக கர்த்தருக்குள் நித்திரையாகினார்.

யோசப் பொன்னையா அடிகளார் 1980 ஏப்ரலில் கத்தோலிக்க அருட்தந்தையாகப் பணியில் மர்த்தப்பட்டார். இவர் பங்கு தந்தையாக மட்டக்களப்பு தூய மரியாள் இணைப் பேராலயம் (1980-82), வாகரை, வீச்சுக்கல்முனை, ஆயித்தியமலை ஆகியவற்றில் பணியாற்றினார். தொடர் இறைசேவையில் ஈடுபட்டிருந்த அடிகளார்.

2008 பெப்ரவரியில் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமிக்கப்பட்டு, 2008 மே மாதத்தில் அதன் ஆயராகப் பதவியேற்றார்.

அதன் பின்னர் 2012 இல் மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் முதலாவது ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவரது இறுதிக் கிரியைகள் தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் என ஆயர் இல்லம் குறிப்பிட்டுள்ளது.

### வீட்டை சோதனையிடச் சென்ற

## பொலிஸ் அதிகாரிகள் இருவர் மீது வாள்வெட்டு

போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கை தொடர்பான இரகசியத் தகவலைத் தொடர்ந்து, மாரபொலவில் உள்ள ஒரு வீட்டை சோதனையிடச் சென்ற வெயாங்கொடை பொலிஸ் அதிகாரிகள் இருவரை வாளால் தாக்கிவிட்டு தப்பிச் செல்ல முயன்ற இருவர் நேற்று முன்தினம்(18) கைது செய்யப்பட்டனர்.

விசாரணையில் தம்பதியினர் வீட்டிற்குள் சிறிய பொதிகளில் போதைப்பொருட்களை மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

பொட்டலம் கட்டப்பட்டிருந்த 12,400 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் ஒரு சிறிய மின்சாரத் தராசையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-4,7)

# சன்ரைசர்ஸ் வெற்றி



லக்னோவுக்கு எதிரான போட்டியில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல் தொடரின் 61ஆவது போட்டி லக்னோவில் நடைபெற்றது.

இதில் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ்- சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி கேப்டன் கம்மின்ஸ் பந்து வீச்சை தேர்வு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 205 ஓட்டங்களைக் குவித்தது.

206 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 18.2 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

59 ஓட்டங்களைக் குவித்த அபிஷேக் சர்மா போட்டியின் ஆட்டநாயகனாகத் தேர்வானார். (ம-4,7)

## வடக்கில்...

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகமொன்றுக்கு நேற்று(19) வழங்கிய தனிப்பட்ட நேர்காணலில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் பல்வேறு இடங்களில் இராணுவ முகாம்களை அகற்றுவதையும் யாழ்ப்பாணத்தில் உள்ள பலாலி உயர் பாதுகாப்பு வலயம் வழியாக செல்லும் வீதியை திறப்பதையும் இராணுவ சீருடையில் இருந்த ஒருவனாக ஏற்றுக் கொள்ள முடியாது.

அத்துடன், இராணுவத்தை முகாம்களுக்குள் அடைத்து வைப்பது ஆபத்தானது என்றும் வெளிநாடுகளில் உள்ள புலம் பெயர்ந்தோர் யாழ்ப்பாணத்தில் பத்து தற்கொலை குண்டுதாரிகளை உருவாக்கும் திறன் கொண்டவர்கள் அல்ல என்று நினைக்கக் கூடாது என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

அவ்வாறு உருவாக்கப்படும் பயங்கரவாதிகள் சஹாரானை போல தாக்குதல்களைத் தொடங்கினால், நூற்றுக்கணக்கான முகாம்கள் மீண்டும் நிறுவப்பட வேண்டியிருக்கும் என்றும், அத்தகைய நிலைமை ஏற்படுவதை முன்கூட்டியே தடுக்க வேண்டும் எனவும் சரத் பொன்சேகா கூறியுள்ளார். (ம-4,7)

## படிப்படியாக...

எடுக்கப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாதுக்க, போபே ராஜசிங்க மகா வித்தியாலய மாணவர் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு நேற்று (19) ஜனாதிபதி அலுவலகத்தின் பழைய பாராளுமன்ற சபாபீடத்தில் நடைபெற்றது.

அங்கு பிரதம அதிதியாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஒரு நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட, செயற்திறன்மிக்க பிரஜைகளை உருவாக்க வேண்டும் என்றும், செயற்திறன்மிக்க பிரஜைகளை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான உறவை மேலும் மேம்படுத்த வேண்டும் என்றும், தற்போதுள்ள கல்வி முறையைப் படிப்படியாக மாற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் பிரதமர் மேலும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் பிரதமர் பதிலளித்தார். (ம-4,7)

# 30 வருட யுத்தத்திற்கு தீர்வு தேடாமல் வெற்றி கொண்டாட்டமா?

## மனோ கணேசன்



(கொழும்பு)

**இலங்கையின் அனைத்து மக்களும் இறந்த தம் அனைத்து உறவுகளையும் ஒன்றாக ஒரே நேரத்தில் இலங்கையர்களாக நினைவு கூரும் ஒரு எதிர் காலத்தை நோக்கி நம் நாடு பயணிக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.**

குறித்த பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது "இலங்கை சமூகத்தில் மரணித்துப் போன உறவுகள், முள்ளிவாய்க்காலிலும், தெற்கிலும் நினைவு கூரப்படுகிறார்கள்.

தெற்கில் இராணுவ வெற்றி விழா நடத்தப்படுகிறது. நினைவு கூரலும், வெற்றி விழாவும் ஒருசேர நடத்தலாம். அந்த நாள் வர வேண்டும்.

ஆனால் அந்த இலக்கை, முப்பது வருட காலம் யுத்தம் நிகழ்ந்தமைக்கான மூல காரணங்களைத் தேடி அறிந்து அவற்றுக்கு தீர்வு தேடாமல் அடைய முடியாது.

1948 ஆம் வருட குடியுரிமை-வாக்குரிமை பறிப்பு சட்டங்கள், சிங்களம் மட்டும் சட்டம், பண்டா-செல்வா மற்றும் டட்லி-செல்வா ஒப்பந்தங்கள் மற்றும் சந்திரிக்காவின் 2000 ஆம் வருட தீர்வு திட்டம் ஆகியவை அகௌரவமான முறைகளில் உதாசீனப்படுத்தப்பட்டமை, 13 ஆம் திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படாமை, பல இனங்கள், மதங்கள், மொழிகள் கொண்ட இலங்கையின் பன்முக தன்மை அங்கீகரிக்கப்படாமை, கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக் குழுவின் சிபாரிசுகள் அமுல் செய்யப்படாமை, யுத்தத்தின் பின் மகிந்த-பான்கி-மூன் வெளியிட்ட கூட்டறிக்கை அலட்சியப்படுத்தப்பட்டமை, ஆகிய தவறுகளை திருத்தி முன் நகர முடியாவிட்டால் எமது நாட்டின் தேசிய பயணம் நின்ற அதே இடத்திலேயே நிற்கும்" என அவர் பதிவிட்டுள்ளார். (நி)

# குறைவடைந்தது முட்டை விலை

(கொழும்பு)

அண்மைய வாரங்களுடன் ஒப்பீடுகையில் உள்ளூர் சந்தையில் முட்டை விலையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமையை நுகர்வோர் கவனித்துள்ளனர்.

நாட்டில் பல பகுதிகளில் முட்டை ஒன்று 20 முதல் 24 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

தமிழ் மற்றும் சிங்கள தமிழ் புத்தாண்டு காலத்தில் முட்டை விலை 26 முதல் 28 ரூபாவாக சற்று அதிகரித்து காணப்பட்டது.

இந்த விலை வீழ்ச்சி, முட்டைகளுக்கான மிகக் குறைந்த விலை அளவைக் குறிக்கிறது என் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)

# இலங்கை வந்தடைந்தார் சிவகார்த்திகேயன்

(கொழும்பு)

தென்னிந்திய முன்னணி திரைப்பட நடிகர்களுள் ஒருவரான சிவகார்த்திகேயன் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். கட்டுநாயக்க, பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த அவரை விமான நிலையத்தின் ஊழியர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

சிவகார்த்திகேயன் நடிக்கும் மதராசி திரைப்படம் செப்ரெம்பர் 5, 2025 அன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# சீரற்ற வானிலையால் 685 பேர் பாதிப்பு

## 177 வீடுகள் சேதம்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நான்கு மாவட்டங்களில் 187 குடும்பங்களைச் சேர்ந்த 685 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம், மன்னார், திருகோணமலை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பெய்துவரும் கன மழை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் குறித்த மாவட்டங்களில் 177 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# இலங்கை திரும்புகிறார் பசில்



(கொழும்பு)

பல மாதங்களாக அமெரிக்காவில் இருந்த சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப் பாளரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ச இலங்கைக்குத் திரும்ப உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அதன்படி, அவர் நாளை மறுதினம் வியாழக்கிழமை நாட்டிற்கு வருவார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க பிரஜையான அவர் கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு, அமெரிக்கா சென்றிருந்தார்.

இந்த நிலையில் தற்போது மீண்டும் அவர் இலங்கை திரும்பவுள்ளார். நாடு திரும்பிய பிறகு அவர் மீண்டும் அரசியல் நடவடிக்கைகளைத் தொடங்குவாரா இல்லையா என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை. (நி-8)

# விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் 19 ஆம் திகதி முதல் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை முன் னெடுக்கப்படவுள்ளது.

டெங்கு அபாயமிக்க பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள 15 மாவட்டங்களில் 95 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே, நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் 20,588 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த ம்மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 3,000இற்கு அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதேநேரம், மேல் மாகாணத்தில் சிக்குன்குனியா நோய் தொற்றும் அதிகரித்துள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். (நி-8)



(சி-148)




# 'யாழின் நாயகன்' கிண்ணத்தை சுவீகரித்தது கொற்றாவத்தை றேஞ்சஸ்



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் மற்றும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் தெல்லிப்பளை நாமகள் விளையாட்டு கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான அணிக்கு 7 பேர் கொண்ட யாழின் நாயகன் உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்றது. இறுதிப்போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்மேரிஸ் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர். இருப்பினும் 8 ஆவது நிமிடத்தில் சென்மேரிஸ் அணி வீரர் மேரிசன் தமது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார்.

ஆனால் சற்றும் சளைக்காமல் போராடிய றேஞ்சஸ் அணி வீரர்கள் 12 ஆவது நிமிடத்தில் கௌதமன் ஒரு கோலைப் பதிவு செய்து பதிலடி கொடுத்தார். மீண்டும் தமது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய சென்மேரிஸ் அணி வீரர் மேரிசன் மேலும் ஒரு கோலைப் பதிவு செய்ய முதல் பாதியாட்டத்தில் சென்மேரிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளுக்கும் சவாலாக அமைந்தது. இருப்பினும் 32 ஆவது நிமிடத்தில் றேஞ்சஸ் அணி வீரர் ஜானுகன் ஒரு கோலைப் பதிவு செய்து மீண்டும் பதிலடி கொடுத்தார். ஆனால் 40 ஆவது நிமிடத்தில் றேஞ்சஸ் அணியின் பின்கள வீரர் லக்சிகன் எதிர்பாராத கோல் ஒன்றைப் பதிவு செய்தார். இருப்பினும் 42 ஆவது நிமிடத்தில் றேஞ்சஸ் அணி வீரர் முறையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்த சென்மேரிஸ் அணிக்கு தண்டனை உதை கிடைத்தது. இதனைச் சரியாக பயன்படுத்தி நிதர்சன் கோலாக்கி பதிலடி கொடுத்தார்.

ஆனால் மிக நுட்பமான ஆட்டத்தை வெளிப்படுத்திய றேஞ்சஸ் அணி வீரர்கள் 47 ஆவது நிமிடத்தில் முன்கள வீரர் ஆர்த்திகன், 48 ஆவது நிமிடத்தில் முன்கள வீரர் சுயாஸ்கான் ஆகியோர் அடுத்தடுத்து இரு கோல்களை பதிவு செய்து சென்மேரிஸ் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தனர். அதன் பின்னர் ஆட்ட நேர முடிவில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று யாழின் நாயகன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

தொடர் ஆட்ட நாயகனாக சென்மேரிஸ் அணி வீரர் ஜெரின்ஸன், ஆட்ட நாயகனாக றேஞ்சஸ் அணி வீரர் ஆர்த்திகன், சிறந்த பின்கள வீரராக சென்மேரிஸ் அணி வீரர் நிதர்சன், சிறந்த கோல் காப்பாளராக றேஞ்சஸ் அணி வீரர் ஆர்நிகன், வளர்ந்து வரும் வீரராக விண்மீன் அணி வீரர் சஞ்சய், நன்னடத்தை அணியாக உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் தெரிவு செய்யப்பட்டனர். (நி-3-8-90)

## ஆசிய மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டிக்கு யாழ்.பல்கலை பெண்கள் அணி தெரிவு






7 ஆவது ஆசிய பல்கலைக்கழ கங்களுக்கு இடையிலான கூடைப் பந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு யாழ். பல்கலைக்கழக பெண்கள் அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப் போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை சீனாவில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.பல்கலைக்கழக அணி சார்பில் வீராங்கனைகளாக அணித் தலைவியாக பி.விதுஷா, கே.தமிழரசி, பி.ஜாணுகா ஆகியோரும் அணி முகாமையாளராக யாழ்.பல்கலைக் கழக போதனாசிரியர் செல்வி. இராதை அருளம்பலம் ஆகியோரும் செல்லவுள்ளனர்.

இச்சுற்றுப் போட்டிக்கு இலங்கையில் இருந்து பெண்கள் பிரிவில் யாழ்.பல்கலைக்கழக அணி மற்றும் கொழும்பு பல்கலைக்கழக அணியும், ஆண்கள் பிரிவில் கொழும்பு பல்கலைக் கழக அணி மற்றும் மொரட்டுவ பல் கலைக்கழக அணியும் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8-30)

## வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி கிண்ணத்தை தனதாக்கியது வவுனியா மாவட்ட அணி



வடக்கு மாகாணத்தில் வலைப் பந்தாட்டப் போட்டிகளில் பல ஆண்டுகளாக சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்த யாழ் மாவட்ட அணியை வீழ்த்தி வவுனியா மாவட்ட அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்து சாதனை படைத்துள்ளது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் மாவட்ட அணிகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா ஓமந்தை உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் பல ஆண்டுகளாக சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்த யாழ் மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி களம் இறங்கியது.

நான்கு கால் பகுதிகளாக நடைபெற்ற ஆட்டத்தில் ஒவ்வொரு கால் பகுதி ஆட்டமும் இரு அணிகளுக்கும் சவாலாக அமைந்தது. முதலாவது மற்றும் இரண்டாவது கால் பகுதி ஆட்டங்களின் நிறைவில் யாழ் மாவட்ட அணி 9:8, 16:15 என ஒரு புள்ளி வித்தியாசத்தில் முன்னிலை வகித்து நின்றனர்.

மூன்றாவது கால் பகுதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக் கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடி 31:31 என சம புள்ளிகளுடன் காணப்பட்டனர்.

இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் நான்காவது கால் பகுதி ஆட்டம் இரு அணிகளுக்கும் பெரும் சவாலாக அமைந்தது.

இதில் யாழ் மாவட்ட அணி தமக்கு கிடைத்த மத்திய எறிகையை தவறவிட வவுனியா மாவட்ட அணியினர் சிறப்பாக விளையாடி ஆட்ட நேர முடிவில் 43:40 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்து வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்தனர். (நி-3-8-90)



# மக்களின் காணிகளை அபகரிக்கும் நோக்கம் அரசாங்கத்திடம் இல்லை

## -காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

(கொழும்பு)

1921 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 2025.03.28 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட தீர்வுக்கான ஆரம்ப அறிவிப்புகள் தொடர்பாக சமூகத்தில் எழுந்துள்ள தவறான கருத்துக்கள் மற்றும் தவறான புரிதல்கள் நீங்கும் வரை, குறித்த வரைபடப் பகுதிகளில் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின்படி அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என காணி அமைச்சு அறிவித்துள்ளது. கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப் பாசன அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2025.03.28 ஆம் திகதி யன்று பிரசுரிக்கப்பட்ட 2430 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 1921 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கை நில அளவைத்திணைக் களத்தின் மூலம் யாழ்ப்பாணம், கிளி நொச்சி, முல் லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் அளந்து தயாரிக்கப்பட்ட 7 நில அளவைக் கிராம வரைபடங்கள் தொடர்பாக, 7 நிர்ணய அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தல்கள் மேற் கூறப் பட்டுள்ள கட்டளைச் சட் டத்தின் 4 ஆம் பிரிவு மற்றும் 1 ஆம் உப பிரிவின் கீழ் பிரத் தியேகமாக குறிப்பிடப்பட்டுள்ள காணி கட்டளைகள் மற்றும் ஒழுங்குமுறை களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. குறித்த பகுதிகளில் காணிகளின் உரி மையைத் தீர்த்து வைப்பதற்காக மட்டுமே விளம்பரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், எந்த வகையிலும் காணிகளை அரசுடமை யாக்கும், கையகப்படுத்தும் நோக்கம் ஏதும் இல்லை.

தீர்வுக்கான ஆரம்ப அறிவிப்பு வர்த்த மானியில் பிரசுரிக்கப் பட்டதன் பின்னர், அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பகுதி களுக்கு உரிமைகள் உள்ள தரப்பினர் மூன்று மாதங்களுக்குள் தங்களின் உரிமைகள் அல்லது உரிமைக் கோரல் களைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சம்பந்தப்பட்ட உரிமைக் கோர ல்களை ஆய்வு செய்த பின்னர் உரிய காணித் துண்டுகளை களத்துக்குச் சென்று ஆய்வு செய்து, காணிகளை அளந்து ஒதுக்கீடு செய்ததன் பின்னர், உரிமை கோரு பவர்களுக்கு உரிய முறையில் வழங்கி வைக் கப்படும்.

நிலங்கள் முறையாக காணிப் பதி வாளர் அலுவலகங்களில் பதிவு செய்யப் பட்டு, இறுதி தீர்வு உத்தரவு வர்த்தமானி அறிவி த்தலில் பிரசுரிக்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு நிலத்தின் உரிமையும் தனியா ருக்குரியதா அல்லது அரசுக்குரியதா என்பது அறிவிக்கப்படும்.

நிலத்தின் உரிமையாளர் எவரேனும் வெளிநாட்டில் வசித்தால் அவர் முறையாக அங்கீ கரிக்கப்பட்ட சட்டத்தரணி மூல மாகவும் தனது கோரிக்கையைச் சமர்ப் பிக்கலாம். உரிமை கோர ல்களைச் சமர்ப்பிப்பதற்குச் சட்டம் மூன்று மாத கால அவகாசம் வழ ங்கினாலும், 1996 ஆம் ஆண் டின் 23 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் கீழ்,இறுதித் தீர்வு உத்தரவு வர்த்தமானி அறிவித்தலில் பிரசு ரிக்கப்படும் வரை சமர் ப்பிக்கப்பட்ட உரிமைக்கோர ல்களை ஏற்றுக்கொள்ளலாம் என்ற சிறப்பு ஏற்பாடு உள்ளது. இது நில உரிமை யாளர்கள் தங்களின் கோரிக்கைகளை முன்வைக்க ஒரு வாய்ப்பை மேலும் வழங்கியுள்ளது.

நில உரிமையாளர் உரிமைக் கோர லைத் தாக்கல் செய்யும் போது, அந்தக் காணி தொடர் பான ஆவணங்கள் மூலமாக மாத்திரம் உரிமை கோரலை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை. மேலும் உரிமை கோரல் விசாரணையின் போது, நிலத் தின் உடைமை, அதனை அனு பவித்தல் மற்றும் நிலத்தினை அபிவிருத்தி செய்திருத்தல் போன்ற அம்சங்களும் கவனத்திற்கொள்ளப்படு வதால், அப்போதைய போர் சூழ்நிலை காரணமாக நிலத்தின் ஆவணங் கள் அழிக்கப்பட்ட, காணாமல் போன நிலத்தின் உரிமையாளர்கள் தங்கள் நிலங்க ளுக்கான உரிமைகளைத் தீர்த்துக் கொள்ள இது ஒரு வாய்ப்பை வழங்கி யுள்ளது.

இந்தச் செயன்முறையின் மூலம் குறித்த வரைபடப் பகு திக்குள் உள்ள காணிகளின் உரிமை தனியாருக்குச் சொந்த மானதா அல்லது அரசுக்கு சொந் தமானதா என்பதைத் தனித் தனியாக அடையாளம் காண முடியும். தனிப்பட்ட காணி உரி மையாளருக்கு அரசாங்கம் அவர் களின் காணியின் உரிமையை இதன்மூலம் உறுதிப்படுத்திக் கொடுக்க வாய்ப்புக் கிடைக்கின் றது என அதில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (க-நி-8)




# இராசிபலன்

20.05.2025
வைகாசி 06, செவ்வாய்க்கிழமை
அட்டமி பின்னிரவு 12.45 மணிவரை

அவிட்டம் பி.ப 3.49 மணிவரை
சுபநேரம் 10.22 - 11.52 மணிவரை
இராகுகாலம் 2.52 -4.22 மணிவரை

சந்திராஷ்டமம்- பூசம், ஆயிலியம்

வளவன்

**மேஷம்** ஊக்கத்தோடும் உற்சகத் தோடும் பணி புரி வீர்கள், பயணங்கள் செல்லப் போட்ட திட் டங்கள் கைகூடும், குடும்பத் தினரின் நலனில் அக்கறை காட்டு வீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** விலை உயர்ந்த பொரு ட்களை கவனமாகக் கையாள்வது நல்லது, மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், புதிய பொறுப் புக்களை யோசித்து ஏற்பது நல்லது, கௌரவ குறைவான நாள்

**துலாம்** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரி யங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** பிரியமான சிலரின் சந் திப்பு இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும், அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்க ளைத் தேடி வரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**ரிஷபம்** சமுதயாத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தெளி தலும், அரை குறை யாக இருந்த பணி களின் மீதியை நிறை வேற்று வீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் கூடும்.

**சிம்மம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், மனதில் இனிய சம்ப வங்கள் இடம் பெறலாம், வாழ்க் கைத் துணை வழியே வரவுகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** சந்தித்த நபர்களால் மகிழ்ச்சி தரும் செய்தி கள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்து சம்பந் தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**கும்பம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய் வத்தை வழிபட வேண்டிய நாள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** விட்டுப்போன தொடர் புகள் மீண்டும் வந்து சேரும், வழிபாடு சிறப் பினைத் தரும், இழு பறியாக இருந்த காரி யங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி** வியாபாரத்தை விரிவுப டுத்தும் எண்ணம் உரு வாகும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கௌர வமான நாள்.

**தனுசு** நீண்ட நாளைய பிணக் குகளில் திசை திருப்பங் கள் ஏற்படலாம், வியா பார விரோதம் விலகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** தொழிலில் உடனிருப்ப வர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, உற வினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாக லாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

நன்றி கெட்டவனுக்கு நல்லது செய்வது கடலில் பன்னீரைத் தெளிப்பதற்கு சமன்

# போர்த்துக்கேயப் படைகளை ஓட, ஓட விரட்டிய
# —மாவீரன் 2ஆம் சங்கிலியன்—

தொன்மையும் சிறப்புக்களும் மிக்க தமிழ் மன்னர் பரம்பரையில் வந்துதித்த வீரமறவனே 2 ஆம் சங்கிலியன். யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதிச் சைவத் தமிழ் மன்னன். 7 ஆம் செகராஜசேகரன் என்ற சிறப்புப் பெயரைக் கொண்டவன்.

கி.பி 1519 - கி.பி 1561 வரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டவன். ஆறாம் பரராஜசேகரனுக்கும் இணுவிலம்பதி மங்காத்தாளுக்கும் மகனாகப் பிறந்தவன். ஆரியச் சக்கரவர்த்திகள் வம்சத்தில் வந்துதித்தவன். சிறந்த சைவத்தமிழ் மன்னனாக யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டவன். நெற்றி நிறைந்த தீருநீறும், நிமிர்ந்த உரம் மிக்க நெஞ்சும், கையினில் வீர வாளும், கண்களில் ஒளியும், கம்பீரத் தோற்றமும், கொண்டவன். நல்லாட்சி நாதனாக விளங்கியவன்.

வலிமை மிக்க காலாட்படை, கடற்படை வைத்திருந்தவன். கடல்கடந்த வணிகத்தில் கொடி கட்டிப் பறந்தவன். நிறைந்த செல்வம் பெற்றிருந்தவன்.

போத்துகேயரின் வணிக முயற்சிகள் நாட்டு நலனுக்கு பாதகமானது என்பதை அறிந்திருந்தவன். இதன் காரணமாக கி.பி1540 களில் போர்த்துக்கேயப் பறங்கிப் படைகளின் கப்பல், யாழ்ப்பாணத்துறைமுகத்திற்கு வந்த வேளை, படைகளை அனுப்பி, கப்பலையும் பொருட்களையும் பறிமுதல் செய்தவன். பறங்கிப் படைகளை ஓட ஓட விரட்டியவன். பறங்கிப் படைகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்தவன். இந்தப் படை நடவடிக்கை மூலம் பறங்கிப் படைகளின் வணிகத்திற்கும், மதமாற்ற நடவடிக்கைகளுக்கும் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவன். பிரான்சிஸ் சவேரியார் பாதிரியாரும், குறோஸ் பாதிரியாரும் மேற்கொண்டிருந்த, சைவர்களை கத்தோலிக்கர்களாக மதம் மாற்றும் நடவடிக்கைகளுக்கு, படை கொண்டு பதில் சொல்லி ஓட, ஓட விரட்டியவன்.

சைவத் தமிழ் மன்னன் 2 ஆம் சங்கிலியன் ஓர் மாவீரன். பறங்கிப் படைகளை ஓட, ஓட விரட்டியிருந்தான் என்பதனை எடுத்து காட்டுவதாக, நல்லூர்- வீரமாகாளியம்மன் ஆலயத்தில் அமைந்திருந்த வயல்வெளியில் 10 நாட்கள் நடந்திருந்த வாற்போர் அமைந்துள்ளது. இப்போரில் 1700இற்கும் மேற்பட்ட பறங்கிப் படைகளின் தலைகள் வெட்டித் தரையில் சாய்க்கப்பட்டிருந்தன. இதைக் கண்ட பறங்கிப்படைகள் கதிகலங்கி சிதறி ஓடித் தப்பின. உயிரைக் காக்க மாவீரன் சங்கிலியனிடம் சரண் புகுவதற்கும் தயாராக இருந்தனர்.

11 ஆம் நாள் மாவீரன் சங்கிலியன் 400 பேரைக் கொண்ட படைவீரர்களுடன் மேலும் முன்னோக்கி சென்றிருந்தான். அவ்வேளை தரங்கமா பாடியிலிருந்து துணைப்படைகள், பறங்கிப் படைகளுக்கு உதவுவதற்கு வர, அவர்கள் உற்சாகமடைந்து போராடத் தயாராகினார்கள். அவ்வேளை நயவஞ்சகம் மிக்க காக்கை வன்னியன், சங்கலிய மன்னனுடன் நட்புப்பூண்டு காட்டிக் கொடுத்து, பறங்கிப் படைகளிடம் வெகு மதிகளைப் பெற்றுக் கொண்டான்.

மாவீரர் சங்கிலியன் சிறைப்பிடிக்கப்பட்டான். கோவா கொண்டு சென்று தூக்கிலிடப்பட்டான். மறைந்தான் மாவீரன். வீழ்ந்தது யாழ்ப்பாண இராச்சியம். ஆண்டனர் பல நூறு ஆண்டுகள் அந்நியர்.

வீரபாண்டிய கட்டப் பொம்மனுக்கு நிகராகச் செயற்பட்டு தமிழையும் சைவத்தையும் கட்டிக்காத்த சங்கிலிய மன்னன் புகழ்பாடுவோம். பரணி பாடுவோம். அவனது வீரம் செறிந்த வரலாற்றை அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்வோம். ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள, அடுத்த சந்ததியினரைத் தயார்படுத்துவோம்.



**யாழ்ப்பாண இராச்சிய இறுதி மன்னன் 2ஆம் சங்கிலிய மன்னனின் 406 ஆவது நினைவு நாள் இன்று**

**என்.பி. ஸ்ரீந்திரன்,**
**செயலாளர்,**
**தமிழ் மன்னன் சங்கிலியன் நினைவுக்குழு.**



தென்மராட்சி - வரணி இயற்றாலை கலைவாணி முன்பள்ளிச் சிறார்களின் சிறுவர் சந்தை நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முன்பள்ளியின் முகாமைத்துவ குழுத் தலைவர் திரு. சு. பார்த்தீபன் தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெற்றது. (படம்- சுபேசன்)

## சைவப் புலவர் பரீட்சை
## திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்

(சாவக்சேரி)

இடைநிறுத்தப்பட்ட சைவப்புலவர் மற்றும் இளஞ் சைவப்புலவர் பரீட்சைகள் இடம்பெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சி.க. கமலநாதன் தெரிவித்துள்ளார்.

மே மாதம் 16,17 மற்றும் 18ஆம் திகதிகளில் இடம்பெறவிருந்த மேற்படி பரீட்சைகள் இடைநிறுத்தப்பட்ட நிலையில் பரீட்சைகள் இடம்பெறும் மறுதிகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-3-30)

## கொடிகாமம் மத்தியில் வெள்ளம்
## பொதுமக்கள் பாதிப்பு



(சாவகச்சேரி)

தொடர்ந்து பெய்து வரும் கன மழை காரணமாக தென்மராட்சி-கொடிகாமம் மத்தி நாவலடிப் பகுதியில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பகுதி மக்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு மாரி மழைக்கும் வெள்ள அனர்த்தத்தை எதிர்நோக்கி வரும் நிலையில் தற்போது கோடை மழையில் கூட அவர்கள் அனர்த்தத்தை சந்தித்துள்ளனர்.

சீரான வடிகாலமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படாமையே தாம் தொடர்சியாக பாதிக்கப்பட காரணம் என அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-3-30)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 400 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 230 | 220 | 210 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 180 | 220 | 150-200 | 300 |
| தக்காளி | 900 | 1000 | 1000 | 800 | 900 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 300 | 240 |
| கோவா | 400 | 550 | 550 | 350 | 600 |
| கரட் | 800 | 950 | 1000 | 900 | 1100 |
| பூசணி | 160 | 180 | 170 | 180 | 200 |
| புடோல் | 200 | 300 | 200 | 220 | 400 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 300 | 120-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 120 | 100 | 120 |
| பாகற்காய் | 800 | 800 | 800 | 800 | 800 |
| வெண்டக்காய் | 300 | 150 | 200 | 150 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 300 | 250 | 200 | 320 |
| பயற்றங்காய் | 200 | 300 | 200 | 250 | 300 |
| லீக்ஸ் | 350 | 300 | 350 | 250 | 400 |
| பீற்றூட் | 600 | 600 | 500 | 400 | 600 |
| கறிமிளகாய் | 800 | 700 | 500 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 1000 | 600-1000 | 1000 |
| போஞ்சி | 400 | 600 | 800 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 300 | --- | 320 |
| கீரை - 1 பிடி | 140 | 150 | 200 | 100 | 150 |
| தேசிக்காய் | 300 | 400 | 250 | 420 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 150 | 200-300 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | -- | 600 |
| வெங்காயப்பூ | 800 | 750 | 600 | 700 | 600 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 140 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 100 | -- |

# உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க தயார்

## சஜித் அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் அரசாங்கம் பெரும்பான்மையை இழந்துள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களிலும் பலத்தை நிலைநாட்டுவதற்கு எதிர்க்கட்சி தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

மாளிகாவத்தை பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வினை முன்வைக்க தற்போதைய அரசாங்கத்தினால் முடியாமல் போயுள்ளது.

குறைந்தபட்சம் உப்பையேனும் உரிய முறையில் நாட்டு மக்களுக்கு வழங்கவில்லை. பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. வாழ்வாதாரத்தை அதிகரிப்பதற்கு முடியாது போயுள்ளது.

இந்தநிலையில் பொறுப்பு மிக்க எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் எமது சேவைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

ஆளும் தரப்பினர் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிறுவுவதற்கு எதிர்க்கட்சிக்கு உரிமை இல்லை என்று மிரட்டல் விடுத்து வருகின்றனர். எதிர்க்கட்சியை இல்லாதொழிக்க இந்த அரசாங்கம் தற்போது பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாண்டு வருகிறது.

எதிர்க்கட்சி பெரும்பான்மை வகிக்கும் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிலை



நாட்டுவதற்கு ஜனநாயகக் கட்டமைப்பிற்குள் எடுக்க முடியுமான உச்சபட்ச நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தி எடுக்கும்" என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (நி)

# எதிர்க்கட்சிகளுடன் கூட்டணி; ஐ.தே.க-ஐ.ம.ச இணக்கம்



(கொழும்பு)

2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மையைப் பெற்ற உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

நிறைவடைந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் எதிர்க்கட்சிக்கு பெரும்பான்மை அதிகாரத்தை வழங்கிய உள்ளூராட்சி சபைகளில் அதிகாரத்தை நிறுவுவது தொடர்பாக நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் பங்கேற்றதுடன், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி தலதா அதுகோரல ஆகியோர் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டு இந்த விடயத்தை தெரிவித்தனர். (நி)

# இலங்கையின் ஆட்சியாளர்கள் படையினரை கைவிட்டுள்ளனர்

## சவேந்திர சில்வா சீற்றம்



(கொழும்பு)

2009 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையை ஆண்ட ஆட்சியாளர்கள் ஆதாரமற்ற யுத்த குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதில் தோல்வியடைந்துள்ளனர் என இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு படை பிரதானியும், இராணுவத்தளபதியும் இறுதி யுத்தத்தில் 58 ஆவது படைப்பிரிவின் தளபதியாக பணியாற்றியவருமான ஜெனரல்சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கங்களின் இந்த தோல்வி, விடுதலைப்புலிகளிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்ட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் உலக நாடுகளின் தண்டனைகளை எதிர்கொள்ளும் நிலையை உருவாக்கியுள்ளது என சவேந்திர சில்வா தொலைக்காட்சி பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

2020 பெப்ரவரியில் தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் எதிராக அமெரிக்கா விதித்த தடைகள் குறித்தும், மார்ச் மாதம் பிரிட்டன் விதித்த தடைகள் குறித்தும் கருத்து தெரிவித்துள்ள அவர் அமெரிக்கா பிரிட்டன் தடைகளால் தான் தென்னாசியாவிற்கு கூட பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ், மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண, மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த, மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா, சக்கி கலகே உட்பட படைப்பிரிவுகளிற்கு தலைமை வகித்தவர் கள் சர்வதேச சமூகத்தின் தண்டனை நடவடிக்கைகளை எதிர்கொண்டுள்ளனர் என சவேந்திரசில்வா தெரிவித்துள்ளார். (நி-8)



முள்ளிவாய்க்கால் நினைவு நாளை முன்னிட்டு இலங்கை தமிழரசுக்கட்சியின் முரசுமோட்டை வட்டாரத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரத்த தான முகாம் முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி முன்றலில் இடம்பெற்றது. (படம்-தேவானந்தன்)


## திருவிழாக் கடைகள் வழங்கல்

**எதிர்வரும் 01.06.2025 முதல் 12.06.2025 வரை இடம்பெறவுள்ள அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் கோயில் திருவிழாவை முன்னிட்டு திருவிழாக்கடைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 25.05.2025 காலை 10.30 மணிக்கு குலுக்கல் முறையில் வழங்கப்படும்.**

(4325)

செயலாளர்,
தர்மகர்த்தாக்கள் சபை,
அளவெட்டி கும்பழாவளைப்
பிள்ளையார் கோயில்





சிவமயம்

## யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதித்தமிழ் மன்னன் 2ம் சங்கிலியனின் 406 ஆவது நினைவு நாள்

## அழைப்பிதழ்-2025

காலம்:
விசுவாவசு வருஷம் வைகாசி தேய்பிறை அட்டமி செவ்வாய்க்கிழமை
(20.05.2025) காலை9.00 மணி

இடம்:
யாழ்ப்பாணம் நல்லூர் முத்திரைச் சந்தி சங்கிலியன் சிலை

தலைமை
**பேராசிரியர்.க.தேவராஜா**
(ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

திருமுன்னிலை:
**சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள்**
(ஆதீன கர்த்தா ஸ்ரீ சுந்தரேச ஆஞ்சநேயர் ஆலயம், மருதனார்மடம்)

**வண.கலைமாமணி.மீகஹஜந்துக ஸ்ரீவிமலதேரர்**
(நாகவிகாரை, யாழ்ப்பாணம்)

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை.)

பிரதம விருந்தினர்:
**கௌரவ.ஸ்ரீசாய்முரளி**
(இந்தியத் துணைத் தூதுவர், துணைத் தூதரகம், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்:
**திரு.சந்திரன் கிருஷ்ணேந்திரன்**
(யாழ்.மாநகரசபை ஆணையாளர், நல்லூர்)

**கலாநிதி.பொ.சந்திரசேகரன்**
(தலைவர் சைவசித்தாந்தபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**டாக்டர்.திரு.த.குகதாசன்**
(நிர்வாக அதிகாரி,யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

**அருள்மொழி வாருதி. சைவப்புலவர்-க.கையிலைவாசன்**
(மேலாய்வு உத்தியோகத்தர், தொல்லியல் திணைக்களம், யாழ்ப்பாணம்)

**கலாநிதி. குருசுவாமி சுரேந்திரன்**
(தேசிய அமைப்பாளர், ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணி, யாழ்ப்பாணம்)

**திரு.வே.கமலேஸ்வரன்**
(ஆசிரிய ஆலோசகர், தென்மராட்சி கல்வி வலயம்)

கௌரவ விருந்தினர்கள்:

**கல்விக்காருண்யர், கொடைவள்ளல்**
E.S.P **நாகரத்தினம்** (யா/தொழிலதிபர், யாழ்ப்பாணம்)

**திரு.ந.திவாகர்** (தொழிலதிபர், அண்ணா தொழிலகம், இணுவில்)

**திரு.S.சண்முகானந்தன்**
(தொழிலதிபர், ராஜா கிறீம் ஹவுஸ்,யாழ்ப்பாணம்)

**கலாநிதி சி.மோகன்**
(தமிழ் பௌத்த காங்கிரஸ் மற்றும் இந்து பௌத்த ஒற்றுமை அமைப்புக்கள். யாழ்ப்பாணம்)

**திருமதி.கிருபாகரன் தனித்தா**
(முதல்வர், கிருபாலேணர்ஸ், யாழ்ப்பாணம்)

**திரு.செ.ஜெகபாலன்**
(தலைவர், மக்கள் நலன்பேணும் அமைப்பு, கோண்டாவில்)

நன்றியுரை
**செல்வி.ச.வளர்மதி** (ஓய்வுநிலை ஆசிரியர்)

N.P.ஸ்ரீந்திரன்
செயலாளர், தமிழ் மன்னன், சங்கிலியன் நினைவுக்குழு

## பாரதம்

### பதவி ஏற்றார் போப் 14ஆம் லியோ



(வத்திக்கான்)

வாடிகன் நகரில் லட்சக் கணக்கானோர் முன்னிலையில், புதிய போப் ஆக ராபர்ட் பிரெவோஸ்ட் பதவி ஏற்றுக் கொண்டார்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மதத் தலைவரான போப் பிரான்சிஸ் அண்மையில் காலமானார். அதன் பின்னர் புதிய போப் ஆக அமெரிக்காவைச் சேர்ந்த ராபர்ட் பிரெவோஸ்ட் தேர்வு செய்யப்பட்டார்.

இதன்மூலம் அமெரிக்காவில் இருந்து தேர்வு செய்யப்பட்ட முதல் போப் என்ற பெருமையை அவர் பெற்றார். இந்நிலையில், வாடிகன் நகரில் லட்சக் கணக்கானோர் முன்னிலையில் புதிய போப் ஆக ராபர்ட் பிரெவோஸ்ட் பதவி ஏற்றுக் கொண்டார்.

அவரின் அதிகாரத்தைக் குறிக்கும் வகையில் மீனவ மோதிரம் அணிவிக்கப்பட்டது. பதவியேற்பு விழாவில் காசா, உக்ரைன் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சிறப்பு பிரார்த்தனை செய்தார்.

இந்நிகழ்வில் அமெரிக்கத் துணை ஜனாதிபதி வான்ஸ், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். (நி-8)

# போர் நிறுத்த

# நிபந்தனைகள் விதி

(ஜெருசேலம்)

**பிணைக் கைதிகள் விடுவிப்பு, ஹமாஸை நாடு கடத்தல், காசா பகுதி இராணுவக் கட்டுப்பாட்டில் இந்த மூன்று நிபந்தனைகளின் அடிப்படையில், ஹமாஸ் உடன் தொடர்ந்து நடந்து வரும் போரை முடிவுக்குக் கொண்டுவர பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.**

மேற்காசிய நாடான இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் காசா பகுதியை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் படையினருக்கும் இடையே கடந்த 2023 இல் தொடங்கிய போர் இன்னும் நீடித்து வருகிறது.

காசா முனையின், டெய்ர் அல்-பலா மற்றும் கான் யூனிஸ் நகரங்களின் புறநகர் பகுதிகளில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.



தாக்

படுத்

தோ

### பயங்கரவாதிகளின் கொடூரத் தாக்குதலில்

## 57 பேர் உயிரிழப்பு - நைஜீரியாவில் சோகம்



(நைஜர்)

நைஜீரியாவில் வட கிழக்கு பகுதியில் 2 கிராமங்களில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 57 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நைஜீரியாவில் ஐ.எஸ், அல்கொய்தா, போகாஹாரம் உள்ளிட்ட பயங்கரவாதக் குழுக்கள் செயற்படுகின்ற நிலையில் போகோஹாரம் எனும் குழு போர்னோ மாகாணம் மாளம் கராண்தி கிராமத்தில் திடீரனெ தாக்குதலை நடத்தியது.

இந்தத் தாக்குதலில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 23 விவசாயிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் 20இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பெண்கள், சிறுமிகள் உட்பட 50இற்கும் மேற்பட்டோர் கொள்ளை கும்பலால் கடத்திச் செல்லப்பட்டதுடன் மற்றொரு கிராமத்திலும் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 34பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தக் கிராமங்களிலும் பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மொத்தம் 57 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# வெள்ளத்தில் தத்தளிக்கும் ஆ



(ஆர்ஜென்டினா)

ஆர்ஜென்டினாவில் தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் குடியிருப்புக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது.

ஆர்ஜென்டினாவில் கனமழை, வெள்ளத்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பியோனஸ் ஏர்ஸ் நகரின் வடக்கு பகுதியில் கடந்த சில நாட்களாக

யோக்க

யத்தில்

லாகப்

கின்றன.

### புரூக்ளின் பாலத்தில் மோதிய கப்பல்

- இருவர் உயிரிழப்பு
- 19 பேர் படுகாயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நியூயோர்க்கில் உள்ள புகழ்பெற்ற புரூக்ளின் பாலத்தின் மீது மெக்சிகோவின் கடற்படைக் கப்பல் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர். மேலும், 19 பேர் படுகாயமடைந்தனர்.

விபத்துத் தொடர்பான வீடி



# த ஒப்பந்தம்! ...நித்த நெதன்யாகு!



குறிப்பாக, வடக்கு காசாவில் தாக்குதலை இஸ்ரேல் தீவிரப் படுத்தியுள்ளது.

வடக்கு காசாவில் உள்ள இந்தோனேஷியன் மருத்துவமனை இஸ்ரேல் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இஸ்ரேல் இராணுவ கட்டுபாட்டுக்குள் வந்துள்ளதால், இந்த மருத்துவமனையில் மருத்துவ சேவைகள் அனைத்தும் நிறுத்தப்படுவதாக காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது

இந்நிலையில், மூன்று நிபந்தனைகளின் அடிப்படையில், ஹமாஸ் உடன் தொடர்ந்து நடந்து வரும் போரை முடிவுக்குக் கொண்டுவரப் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். (நி)

## புலம்பெயர்ந்தோர் படகு விபத்து 61 பேர் மீட்பு, ஒருவர் உயிரிழப்பு



(டில்லி)

புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்ற படகு ஒன்று பிரான்ஸ் நகரான பவுலோன்-சுர்-மெர் அருகே ஆங்கிலக் கால்வாயைக் கடக்க முயன்றபோது மூழ்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

படகில் அதிக சுமை ஏற்றப்பட்டமையினால் இந்த விபத்து ஏற்பட்டதாக பிரெஞ்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் 61 பேர் மீட்கப்பட்டதாகவும் உயிர் பிழைத்தவர்களில் ஒரு குழந்தையும் அவரது தாயும் தாழ்வெப்ப நிலையால் பாதிக்கப்பட்டனர், அவர்கள் விமானம் மூலம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அத்துடன் ஏனையவர்கள் பவுலோன்-சுர்-மெருக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அண்மைய புள்ளி விபரங்கள், கால்வாயைக் கடப்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், அது ஏப்ரல் மாத இறுதியில் 10,000 ஐ விஞ்சியதாகவும் கூறுகின்றது. (நி-3)

## ஆர்ஜென்டினா



ழ, ல்பு திக் ங்கு ாக

கனமழை பெய்து வருகிறது. இடைவிடாது கொட்டித்தீர்த்த கனமழையால், குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுந்தது.

இதனால் வீடுகளை விட்டு வெளியே வர முடியாமல் மக்கள் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை படகுகள் மூலம் மீட்கும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

ஆர்ஜென்டினாவில் பெய்து வரும் தொடர் மழையால் அங்கு சோயாபீன் அறுவடையும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. (நி)

யாக்கள் இணை த்தில் வைர ாகப் பரவி வரு ன்றன.

இந்த விபத்துக் குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. (நி)



## பொற்கோயிலை குறிவைத்த பாகிஸ்தான்
### இந்திய இராணுவ மூத்த அதிகாரியின் அதிர்ச்சித் தகவல்



(டில்லி)

மே 8 அன்று பஞ்சாபின் அமிர்தசரஸில் உள்ள பொற்கோயிலை ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் பாகிஸ்தான் குறிவைத்தது என்ற அதிர்ச்சித் தகவலை இந்திய 15 ஆவது காலாட்படை பிரிவின் பொது அதிகாரி மேஜர் ஜெனரல் கார்த்திக் சி சேஷாத்ரி நேற்று வெளியிட்டார்.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள ஒன்பது பயங்கரவாதத் தளங்கள் மீது இந்தியா நடத்திய தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டது.

எனினும், இராணுவ வான் பாதுகாப்பு பீரங்கிகள் பொற்கோயிலைக் குறிவைத்துத் தாக்கப்பட்ட அனைத்து ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளையும் சுட்டு வீழ்த்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் இராணுவத்திற்கு எந்த முறையான இலக்குகளும் இல்லை என்பதை அறிந்திருந்தும், அவர்கள் இந்திய இராணுவ நிறுவல்கள், மத இடங்கள் உட்பட பொதுமக்கள் இலக்குகளை குறிவைப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்தோம்.

இவற்றில், அமிர்தசரஸில் உள்ள பெற்கோயில் மிக முக்கியமானதாகத் தோன்றியது.

பொற்கோயிலுக்கு முழுமையான வான் பாதுகாப்புக் குடையை வழங்க மேலதிக நவீன வான் பாதுகாப்பு ஏற்பாடுகளை நாங்கள் ஏற்படுத்தினோம்.

இதனால், பொற்கோயிலைக் குறிவைத்த அனைத்து ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளையும் சுட்டு வீழ்த்தினோம்.

இதனால் நமது புனித பொற்கோயிலில் ஒரு கீறல் கூட ஏற்பட அனுமதிக்கப்படவில்லை என்று அவர் கூறினார்.

**ஆகாஷ் ஏவுகணை அமைப்பு, எல்-70 வான் பாதுகாப்புத் துப்பாக்கிகள் உள்ளிட்ட இந்திய வான் பாதுகாப்பு அமைப்புகள், அமிர்தசரஸில் உள்ள பொற்கோயிலையும் பஞ்சாப் நகரங்களையும் பாகிஸ்தான் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களிலிருந்து எவ்வாறு காப்பாற்றின என்பதற்கான ஒரு செயல் விளக்கத்தை இராணுவம் நேற்றுக் காட்சிப் படுத்தியது.** (நி-8)

# கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கரவெட்டிக்கான நீர்விநியோகம்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு தாளையடி நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து கரவெட்டிக்கு நீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி மத்தொனி தாழங்குழியில் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கியில் இருந்து நீர் வழங்கும் செயற்பாடு நேற்று சமய நிகழ்வுடன் ஆரம்பானது.

நிகழ்வில் பிராந்திய பொறியியலாளர் உதயசீலன், யாழ் மாவட்ட பொறுப்பதிகாரி யசோதரன், பருத்தித்துறை நீர் வழங்கல் சபை பொறுப்பாளர் மதிவாணன், கரவெட்டி அபிவிருத்தி ஒன்றிய தலைவர் இராகவன், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு நீர் விநியோகச் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி ஏற்பாடுகளின் கீழ் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு அமைச்சு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர்வழங்கல் வேலைத்திட்டத்தின் கீழ் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

இந்த கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் 266 மில்லியன் டொலர்கள் செலவில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(நி-33-60)

## போர் வீரர் தினத்தையொட்டி
# முப்படைகளின் அதிகாரிகளுக்கு நேற்று முதல் பதவி உயர்வு



(கொழும்பு)

16 ஆவது தேசிய போர் வீரர் தினத்தை முன்னிட்டு, முப்படைகளின் அதிகாரிகள் மற்றும் பிற அணிகளுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கை கடற்படையின் 22 அதிகாரிகள் மற்றும் 1,256 பிற அணிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

மேலதிகமாக, இலங்கை விமானப்படையின் 12 அதிகாரிகள் மற்றும் 848 பிற அணிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

16ஆவது தேசிய போர் வீரர் தினத்தை முன்னிட்டு, இலங்கை இராணுவத்தின் 10,093 பிற அணிகளுக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது. (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா-18
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, Driver(கட்டார்)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15483

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா-13 1/2
உயரம்: 5'6"
தகைமை/தொழில் -A/L, France
எதிர்பார்ப்பு: France, German
தொ.இ: B/15484

பிறப்பு: 1989-இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம்: 5'
தகைமை/தொழில் : BEd, Teacher
எதிர்பார்ப்பு: Teacher
தொ.இ: B/15485

பிறப்பு: 1985- இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: MBA, AIB, உதவி முகாமையாளர்
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15486

பிறப்பு: 1987- இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா-32
12இல் செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Company (own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15487

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986-இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
உயரம்: 5'
தகைமை/தொழில்: BFA, DO
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர், உத்தியோகம்
தொ.இ: G/14996

பிறப்பு: 1998-இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 19 3/4
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Bsc in Production Technology
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14006

பிறப்பு: 1991-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 11 3/4
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:Diploma in Teaching
எதிர்பார்ப்பு: உள்நாடு (அரச தொழில்), வெளிநாடு
தொ.இ: G/14008

பிறப்பு: 1990-இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா-43
உயரம்: 5
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14223

பிறப்பு: 1982-இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா-36 3/4
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BA,DO
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்,விவாகரத்தானவர்
தொ.இ: G/14185

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேச சபை:- தெல்லிப்பளை உப அலுவலகம்
உரிமையாளர் பெயர்:- ஜெகதீஸ்வரன் மகள் லோகிதா
விண்ணப்பதாரர் பெயர் :- ஜெகதீஸ்வரன் மகள் லோகிதா
முகவரி :- தெல்லிப்பளை, மாவிட்டபுரம்

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 09, மாரியம்மன் கோயில் வீதி ஆதன இல. 54/5இல் இவ்வாதனம் அமைந்துள்ளது. குறித்த ஆதனமானது 06.03.2021 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் திரு. நாகேந்திரன் பார்த்தீபன் அவர்கள் முகதாவில் இலக்கம் 829 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் இவ்வாதனம் விண்ணப்பதாரியை வந்தடைந்தது.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.பத்மகாந்தன் அவர்களால் அளந்து வரைந்த 127 ஆம் இலக்க 28.12.2020 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் துண்டு - 1 ஆக காட்டப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பளை கோவிற்பற்று மாவிட்டபுரம் இறை "செருக்கன் கிணற்றடி" நிலப்பரப்பு இரண்டும் குளி ஆறு தசம் மூன்று ஆறும் (நில.பர 2 குளி 6.36) வீடும் இது தெல்லிப்பளை மாவிட்டபுரம் தெற்கு (J/231) கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு - குறித்த படத்தில் துண்டு 2 ஆக காட்டப்பட்ட ஆதனம்
வடக்கு - 6-8 அடி அகலமான பாதை
மேற்கு - தங்கராசாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்
தெற்கு - சங்கரப்பிள்ளை காசிப்பிள்ளையின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை **பாசந்திரன் சசிக்குமார் ஜெகதிஸ்வரன் மகள் லோகிதா** என்னும் பெயரில் ஆதனப் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்**
**செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(4331)

# வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள்

## வீதி புனரமைப்பு தொடர்பில் கண்டாவளை மக்கள் போராட்டம்



(கண்டாவளை)

**வீதியைப் புனரமைத்துத் தருவதாக வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என தெரிவித்து கண்டாவளை கல்மடுநகர் பிரதேச மக்கள்பிரதேச செயலகம்முன்பாக நேற்றைய தினம் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்**

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கல்மடுநகர் ரங்கன் குடியிருப்புப் பகுதியில் 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் இக் கிராமத்திற்கான பிரதான வீதி மற்றும் சேதமடைந்த பாலம் என்பவற்றைப் புனரமைத்து தருமாறு தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு காலத்துக்கு காலம் வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதும் அந்த வீதிகள் இதுவரை புனரமைக்கப்படவில்லை.

இதனால் குறித்த பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் கர்ப்பவதிகள் எனப் பலரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் தங்களுடைய போக்குவரத்துக்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்திற்கு பாடசாலை பேருந்து சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்ட போதும் வீதி சீரின்மையால் அது இடம் பெறுவதில்லை எனவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்

தங்களுடைய பிரதேசத்துக்கான பிரதான வீதியை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து வீதியைப் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்போது ரங்கன் குடியிருப்பு மக்களுக்கு நிரந்தர வீதி வேண்டும், உடைக்கப்பட்ட பாலம் உடனடியாகத்திருத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளுடன் பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் இவ் விடயம் தொடர்பாக நேற்றைய தினம் கண்டாவளைப் பிரதேச செயலாளரை பாதிக்கப்பட்ட மக்கள் நேரில் சென்று வினவிய போது சம்பந்தப்பட்ட திணைக்களமான வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு ஏற்கனவே தெரிவித்துள்ளதாகவும் இன்றும் மக்களின் போராட்டம் தொடர்பாகவும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.



தற்பொழுது பயன்பாட்டில் உள்ள மாற்று வீதி கடந்த 2016 ஆம் ஆண்டு தொடக்கம் தற்பொழுது வரை மக்கள் பயன்படுத்தி வருவதன் காரணமாக அவ்வீதியை மக்களின் பாவனைக்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியின் வரைபடத்தில் பாதையுள்ளதாகவும் எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி உரிய பாதையினை புனரமைத்து மக்கள் பாவனைக்கு வழங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என தெரிவித்தார். (நி-8-315-316)

# உப்பள ஊழியர்களின் போராட்டம் தொடர்கிறது



(கண்டாவளை)

ஆனையிறவு உப்பள ஊழியர்களின் போராட்டம் ஆறாவது நாளாக நேற்றும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது

குறித்த உப்பளத்தில் கடந்த ஒன்பது வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றும் தற்காலிக பருவகால ஊழியர்கள் தங்களுடைய பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் இங்கு உற்பத்தியாகும் உப்பினை ஆனையிறவில் பொதிசெய்து விநியோகிக்குமாறும் தற்போதைய முகாமையாளரை இடமாற்றக் கோரியும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை கடந்த புதன் கிழமை ஆனையிறவு உப்பளத்தின் முன்பாக முன்னெடுத்திருந்தனர்

இந்நிலையில் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றைய தினமும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டிருந்தது. (நி-8-315)

# முல்லை மாவட்டத்தில் நீச்சல் போட்டி



(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத் துறையினரின் ஒழுங்குபடுத்தலில் 2025ஆம் ஆண்டுக்கான முல்லைத்தீவு மாவட்ட மட்டத்திலான நீச்சல் போட்டி கடந்த 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை குமுழமுனை கொட்டுகிணற்று பிள்ளையார் ஆலய நீச்சல் தடாகத்தில் இடம்பெற்றது.

குறித்த போட்டியில் இளைஞர்களுக்கான 50மீற்றர், 100 மீற்றர் நீச்சல்போட்டியும், அஞ்சல் ஓட்ட நீச்சலும் இடம்பெற்றிருந்தது. அத்துடன் போட்டியில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கு பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு, சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன. (8-299)

# நீண்டகால பிரச்சினைகள் தொடர்பில் முல்லையில் விசேட கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாதிருந்த சுகாதார மற்றும் போக்குவரத்துப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்டத்தின் சுகாதாரப் பிரச்சினைகள், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் சவால்கள் முதலில் ஆராயப்பட்டது.

தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏனைய சுகாதார பிரச்சினைகள் தொடர்பாகவும்ஆராயப்பட்டன. அதன் பின்பு சுதேசத் திணைக்களத்தினர் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் என்பனவற்றால் முன்வைக்கப்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

இரு தரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றச் சாட்டுக்களை முன்வைத்திருந்த நிலையில், நேர அட்டவணைக்கு அமைவாக குறிக்கப்பட்ட நேரத்தில் பேருந்துகளை இரு தரப்பினரும் இயக்கவேண்டும் எனவும், அது தொடர்பான கண்காணிப்புக்களைத் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில், முல்லைத்தீவு மாவட்டச் செயலர், சுகாதார அமைச்சின் செயலர், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர், சுகாதாரப் பணிப்பாளர், சுதேச மருத்துவத் திணைக்களத் தின் மாகாணப் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவமனை அத்தியட்சகர்கள், பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பொதுமுகாமையாளர், இலங்கை போக்குவரத்துச் சபையினர், தனியார் பேருந்து உரிமையாளர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர். (நி-8)



வடக்கிற்கு வருகை தந்த அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர்நாயகம் எச்.எஸ்.கே.ஜே.பண்டார கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களைக் கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் விருத்தி நிலைய மண்டபத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார். (படம்: தேவானந்தன்)

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 777





அதற்காகச் சத்தம் செய்து கொண்டிருக்கிறேன். சின்ன எஜமான் காஞ்சிக்குப் போகும்போது அவ்விதம் கட்டளை இட்டுச் சென்றார்கள்.

"ஆம், இடும்பா! இந்த அரண்மனையிலேயே சின்ன எஜமானுக்கு உன்னிடமும், என்னிடமுந்தான் நம்பிக்கை. பழுவூர் ராணியம்மாள் தங்கப்போகிற அறையில் ஏற்பாடு சரியாயிருக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது இங்கே என்னமோ சத்தம் கேட்டது. நீயாகத்தான் இருக்கும் என்று நினைத்தேன் வேறு யாருக்கு இந்த அரண்மனையின் இரகசிய வழிகள் தெரியும்? எத்தனை நேரமாக நீ இங்கே வேலை செய்து கொண்டிருக்கிறாய்?"

"ஒரு நாழிகைக்கு மேலே இருக்கும், தாயே! இன்னும் ஒரு நாழிகை வேலை இருக்கிறது. தாங்கள் தனியாகவா இங்கே வந்தீர்கள் அந்த வாயாடிப் பெண் சந்திரமதி எங்கே?"

"ஏதோ சத்தம் கேட்கிறது என்று நான் அவளைப் போய்த் தந்தையை அழைத்து வரச் சொன்னேன். நீதானே இங்கு இருக்கிறாய்? நான் போய் அவளைத் தடுத்து நிறுத்தி விடுகிறேன்."

இவ்விதம் சொல்லிக் கொண்டே மணிமேகலை விளக்கைத் தூக்கிப் பிடித்து இடும்பன்காரியின் முக மாறுதலைக் கவனித்தாள். அடுத்தாற் போல், வாலில்லாக் குரங்கை நோக்கினாள். முன்னொரு தடவை அசைந்தது போல், அது அசைந்ததையும் பார்த்துக் கொண்டாள்.

"ஆம், தாயே! எஜமானுக்கு இன்று எவ்வளவோ அலுவல், தாங்கள் போய் அவரைக் கூப்பிட வேண்டாம் என்று சொல்லிவிட்டு நிம்மதியாகப் படுத்துக் கொள்ளுங்கள். எல்லா வேலைகளையும் நானே பார்த்துக் கொள்கிறேன்" என்றான் இடும்பன்காரி. மணிமேகலை மறுபடியும் வந்த வழியே உள்ளே போனாள் இரகசியக் கதவு மூடிக் கொண்டது.

இடும்பன்காரி யானை முகத்தினருகில் சென்று சற்று நேரம் சுவரண்டை காது கொடுத்து உற்றுக் கேட்டான். அடுத்த அறையில் சத்தம் ஒன்றும் இல்லை என்று நிச்சயம் அடைந்த பிறகு திரும்பி வந்தான். பிலத்துவாரத்தைத் திறந்து வைத்துக் கொண்டு இடுப்பு வரை கீழே படிகளில் இறங்கி நின்று கொண்டான். பிலத்துவாரத்தின் உட்புறமிருந்து ஆந்தையின் குரல் கேட்டது. பதிலுக்கு இடும்பன்காரி ஆந்தைக் குரல் ஒன்று கொடுத்தான். பில வழியில் ஆட்கள் நடந்து வரும் சத்தம் கேட்டது. பின்னர் காரியங்கள் வெகு துரிதமாக நடைபெற்றன.

வௌவால் ஒன்று சடசடவென்று சிறகை அடித்துக் கொண்டு பறந்தது. இடும்பன்காரி அதைப் பார்த்தான். பின்னாலிருந்து அவன் பேரில் வாலில்லாக் குரங்கு தடால் என்று விழுந்தது. அது திடீரென்று விழுந்த வேகத்தினால் இடும்பன்காரியின் முழங்கால்கள் மடிந்து அவன் தடுமாறினான். அதனால் இன்னும் இரண்டு படிகள் அவன் கீழே இறங்க வேண்டியதாயிற்று. தன் பேரில் விழுந்தது இன்னதென்று முதலில் இடும்பன்காரிக்குத் தெரியாமையால் அவன் உளறி அடித்துக் கொண்டு கைகளை வீசி உதறினான். பிறகு, உயிரற்ற வாலில்லாக் குரங்கு எப்படியோ தவறித் தன் பேரில் விழுந்திருக்கிறது என்று தெரிந்தது. மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு அதைத் தூக்கி நிறுத்தப் பார்த்தான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பரிசு ஊக்கமும்



மணிகண்டன் தன் பெற்றோருடன் திருச்சியில் வாழ்ந்து வந்தான். ஐந்தாம் வகுப்பு படித்து கொண்டிருந்தான் மிகவும் சோம்பேறி, அவன் எந்த வேலையும் விருப்பமுடன் செய்ய மாட்டான்.

அவன் பெற்றோர்களோ மணியை நல்ல முறையில் வளர்த்து ஆளாக்க வேண்டும் என்ற கனவோடு வாழ்ந்து வந்தார்கள்.

மணியை நல்ல ஒழுக்கத்தோடு வளர்க்க வேண்டும் என்று நினைத்தார். அப்பா மணியிடம் நீ அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும், காலைக் கடனை முடித்து விட்டு சிறிது உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

அதன்பிறகு குளித்து விட்டு கடவுளை வணங்க வேண்டும். பிறகு பள்ளிப் பாடங்களை எடுத்து ஒரு முறை படித்து விட்டு காலை உணவு உண்டவுடன் பள்ளிக்கு செல்ல வேண்டும். என்று கட்டளையிட்டார் மணியோ சரி சரி என்று கேட்டு விட்டு... அவனால் அதிகாலையில் எழுந்திருப்பது என்பது மிகவும் கடினம்.

உடற்பயிற்சி செய்வதோ நினைத்துப் பார்க்க முடியாத விடயம். இவ்வாறு அப்பாவின் எண்ணத்திற்கும், மணியின் சோம்பேறித்தனத்திற்கும் இடையே பெரிய போராட்டமே நடந்தது அவன் செயலால் அப்பா தினமும் மணியைத் திட்டிக் கொண்டிருந்தார். மணியும் வருத்த முடன் பள்ளிக்கு சென்று கொண்டிருந்தான். பள்ளி படிப்பிலும் மணியால் சீரான மதிப்பெண்கள் பெற முடியவில்லை. அப்பாவின் திட்டும் பள்ளி ஆசிரியரின் கண்டிப்பும் மணிக்கு தாழ்வு மனப்பான்மையை உண்டு பண்ணியது.

என்னால் எதையும் சரியாகச் செய்ய முடியாது என்று நினைத்துக் கொண்டான். மணி சோம்பேறி என்பதைத் தவிர மிகவும் நல்ல பையன் அப்பாவிற்கும் சரி நம்ம பையன் திறமை அவ்வளவு தான் என்று சலித்துக் கொண்டார். ஒரு நாள் ஊரிலிருந்து மணியின் மாமா வந்தார் மணிக்கு மாமா என்றால் மிகவும் பிடிக்கும் எப்பொழுது வந்தாலும் மணிக்கு பரிசு, விளையாட்டுச் சாமான்கள் வாங்கி வருவார்.

மணியின் படிப்பு பற்றியும்,சோம்பேறித்தனத்தைப் பற்றியும் அப்பா, மாமாவிடம் கவலையுடன் கூறிக் கொண்டார். மாமா, இது ஒரு விடயமா எல்லாம் சரியாகிவிடும் என்றார். மறு நாள் காலையில் மாமா எழுந்து மணியிடம் வந்தார். மணி நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். மாமா மணியின் அருகில் அமர்ந்து மணி நான் கடைத் தெருவுக்கு போகிறேன் உனக்கு எதாவது விளையாட்டுச் சாமான் வாங்கலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன் நீயும் என் கூட வருகிறாயா, வந்தால் விளையாட்டு சாமான் வாங்கலாம் என்று சொல்லி முடிக்கும் முன் மணி வருகிறேன் மாமா என்றான். (தொடரும்...)

> என்னிடம் சிறப்பான தனித்திறமை என்று எதுவுமே இல்லை. என்னிடம் இருப்பது ஆர்வம் மட்டுமே.
> ~ ஆல்பர்ட் ஐன்ஸ்டின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# ராஜபக்ஷ தரப்பின் பருப்பு இனி அவியப் போவதில்லை

சிங்களமக்களால் ஓட ஓடத் துரத்தப்பட்டவர்கள் மகிந்த ராஜபக்ஷ தரப்பினர்.

இலங்கையின் வரலாற்றில் முன்பும் இல்லை. இனியும் இருக்கப்போவதில்லை என்று கூறுமளவுக்கு ஒட்டுமொத்த மக்களும் திரண்டு, ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவை ஓட விரட்டினர்.

ஆம், பேரெழுச்சியுடன் திரண்ட மக்கள் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட, செய்வதறியாது திகைத்த கோட்டாபய ராஜபக்ஷ பின்வழியாக ஓடித் தப்பினார்.

இதேபோல மகிந்த ராஜபக்ஷவும் அவர் தரப்பினரும் வெளியில் வரமுடியாத அளவில் மறைந்திருந்தனர்.

ஆக, எந்த ஆட்சித் தலைமைக்கும் நடந்திராத மக்கள் எதிர்ப்பு மகிந்த ராஜபக்ஷ தரப்புக்கு நடந்தது.

ஏதோ! ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவிக்கு ஆசைப்பட்டதன் காரணமாக, மகிந்த தரப்பு தப்பிப்பிழைத்ததேயன்றி மற்றும்படி மக்கள் அவர்களைத் துவம்சம் செய்யவே இருந்தனர் என்பது தெரிந்த சங்கதி.

நிலைமை இதுவாக இருக்கையில், விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து இந்த நாட்டை பயங்கரவாதத்தில் இருந்து மீட்டவன் நான் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மார்தட்டுவதைப் பார்க்கும்போதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

விடுதலைப் புலிகளை அழித்து நாட்டை மீட்டேன் எனக் கூறுகின்ற மகிந்த ராஜபக்ஷ, தான் நடத்திய கொடும்போரில் பலியாகிய அப்பாவித் தமிழ் மக்கள் பற்றி எதுவும் கூறாமல் விட்டமைதான் விசித்திரமானது.

உண்மை. போரில் உயிரிழந்த அப்பாவித் தமிழ் மக்களை விடுதலைப் புலிகளின் பட்டியலுக்குள் சேர்க்கின்ற கயமைத்தனம் மகிந்த தரப்பிடம் இருப்பதுதான் மிகக் கொடுமையானது.

இங்குதான் தமிழின அழிப்பில் உயிரிழந்த தமிழ் மக்களின் நினைவாக கனடாவில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபிக்கு பயங்கரவாதச் சாயத்தைப் பூசுவதற்கு முற்படும் மகிந்த ராஜபக்ஷ; குறித்த நினைவுத் தூபி புலிப் பயங்கரவாதத்தின் நிழல் என்பதுபோல விமர்சித்துள்ளார்.

இங்குதான் போர்க்குற்ற அச்சம் மகிந்தவை வருத்துவது தெரிகிறது. அதனாலேயே சிங்கள மக்களிடம் அனுதாபத்தைப் பெற, விடுதலைப் புலிகளை அழித்து நாட்டை மீட்டவன் நான் என மகிந்த ராஜபக்ஷ கூறத் தலைப்பட்டுள்ளார்.

எனினும் மகிந்த தரப்பின் பருப்பு இனி சிங்கள மக்களிடம் அவியப்போவதில்லை என்பது நிறுதிட்டமான உண்மை. ஆதலால் மகிந்த ராஜபக்ஷவின் பிதட்டல்கள் இனி செல்லுபடியற்றவை.

# இலங்கையில் இடம்பெற்றது யுத்தப்படுகொலை மாத்திரமல்ல அதுவோர் இன அழிப்பு

## கனேடிய கென்சவேடிவ் கட்சித் தலைவர் தெரிவிப்பு

(ஒட்டாவா)

இலங்கையில் இடம்பெற்றவை யுத்தப் படுகொலைகள் மாத்திரமல்ல. அங்கு அரங்கேறியவை கடந்த நூற்றாண்டின் மிகப்பெரிய துயரங்களில் ஒன்றான தமிழின அழிப்புமே எனக் கனேடிய கென்சவேடிவ் கட்சியின் தலைவர் பியர் பொலியியர் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ராஜபக்ஷ அரசாங்கத்தின் யுத்தக் குற்றங்களை ஒருபோதும் மறக்கக் கூடாது. அந்தக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையின்றி தப்ப அனுமதிக்க கூடாது.

வரலாற்றைத் திரும்பிப்பார்க்கும் அனைவரும் பெருமிதமான தருணங்களையும் வலிமிகுந்த தருணங்களையும் நினைவுகூருவார்கள்.

தமிழினப்படுகொலை நினைவுநாளில் கடந்த நூற்றாண்டின் மிகப் பெரிய துயரங்களில் ஒன்றான தமிழ் இனப்படுகொலை குறித்து எங்கள் எண்ணங்களைத் திருப்புகின்றோம்.

பல தசாப்தங்களாக இலங்கை வன்முறையாலும் இரத்தக்களறியாலும் பாதிக்கப்பட்டது. ஏற்கனவே பல வருடங்களாகத் துயரங்களை அனுபவித்த நிலையில் 2009 மே மாதம் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டமை ஈவிரக்கமற்ற தன்மையின் உச்சமாகும்.

**இது வெறுமனே படுகொலை மாத்திரமல்ல, இது ஓர் இன அழிப்பு.**

ராஜபக்ஷ அரசாங்கத்தின் யுத்தக் குற்றங்களை ஒருபோதும் மறக்கக் கூடாது. அந்தக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையின்றி தப்ப அனுமதிக்கக்கூடாது.

அதற்கு கனடா வலுவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பொறுப்புக்கூறலை கோர வேண்டும். கனடா யுத்த குற்றவாளிகளிற்கான புகலிடமாக ஒரு போதும் விளங்கக் கூடாது. தமிழ் இனப்படுகொலைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு கென்சவேர்டிவ் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கும்.

கனடாவில் உள்ள தமிழ் சமூகம் நம்பமுடியாத மீள் எழுச்சி தன்மையை வெளிப்படுத்தியுள்ளது. வேதனையை வலிமையாக மாற்றியுள்ளது. எங்கள் நாட்டை வளப்படுத்தியுள்ளது.

இந்த இனப்படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களை நாங்கள் நினைவுகூரும் இந்தத் தருணத்தில் அனைவருக்கும் நீதி மற்றும் சமாதானத்திற்கான எங்கள் அர்ப்பணிப்பை மீளவலியுறுத்துகின்றோம்.

எங்கள் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர், ராஜபக்ஷ அரசாங்கத்தை எதிர்த்து நின்றார் என்பது குறித்து நான் பெருமிதம் அடைகின்றேன்.

நான் ராஜபக்ஷ அரசாங்கம் தங்கள் குற்றங்களிற்காகப் பதில் கூறுவதை உறுதி செய்வதற்காக தொடர்ந்தும் போராடுவேன். சர்வதேச நீதிமன்றத்தில் அவர்களை பாரப்படுத்தும் நடவடிக்கைகளை எடுப்பேன் என்றுள்ளது. (ம-4,7)

# தேய்பிறை அஷ்டமி உற்சவம்

யாழ்ப்பாணம் கொக்குவில் தலையாழி அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (20) தேய்பிறை அஷ்டமி உற்சவம் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

மாலை ஞானவைரவப் பெருமானுக்கு விஷேட அபிஷேகம் இடம்பெற்று, வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சகஸ்ர நாம அர்ச்சனையும் நெய் விளக்கேற்றலும் நடைபெறவுள்ளது. (ம-4,7)

## நல்லூரரான் ஆலய புனித பூமிக்குள்

# அசைவ உணவகம் செயற்பட உடனடித் தடை விதியுங்கள்

## வலியுறுத்துகிறது சைவபரிபாலன சபை

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மித்ததாக அசைவ உணவகம் அமையப் பெற்றமைக்கு சைவபரிபாலன சபை கடுங்கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சைவ பரிபாலன சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நல்லூர்க்கந்தன் ஆலயத்தின் புனித பகுதிக்குள் புதிதாக அசைவ உணவகம் அமையப் பெற்றுள்ளமை சைவ சமயக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கும் மக்களின் மனங்களைப் பாதிக்கும் செயல். இது ஆன்மீக உளவியலுக்குப் பாதிப்பையே ஏற்படுத்தும் என சைவபரிபாலன சபை கருதுகிறது.

எனவே அசைவ உணவு தயாரிக்கும் மற்றும் விற்பனை செய்யும் செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அத்துடன் மேற்படி செயற்பாடுகளுக்கு தடை விதிக்க பொறுப்புடையோர் ஆவன செய்ய வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம் என்றுள்ளது. (ம-4,7)

# தென்னகோனின் ஆட்சேபனைகளை நிராகரித்தது விசாரணைக்குழு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், அவரது பதவி துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரித்து அறிக்கை அளிப்பதற்கு நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவில் நேற்றுப் பிற்பகல் முன்னிலையாகியிருந்தார்

இதன்போது தேசபந்து தென்னகோனின் சட்டக்குழு முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனைகளை விசாரணைக் குழு நிராகரித்து, மேலும் 23 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரிகையை விசாரணைக் குழு வழங்கியுள்ளது.

அதற்கமைய மேலதிக விசாரணைக்காக, எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் கூடுவதற்குக் குழு தீர்மானித்துள்ளதாகப் பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-4,7)

## வவுனியா மேல்நீதிமன்றினால்

# நிறைவுற்ற வழக்குகளின் சான்றுப் பொருட்கள் அழிப்பு

வவுனியா மேல் நீதிமன்றத்தால் 50க்கு மேற்பட்ட வழக்குகளுடன் தொடர்புடைய கஞ்சா உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.நிஹால் முன்னிலையில் வவுனியா, மடுகந்த காட்டுப் பகுதியில் நேற்று (19) அழிக்கப்பட்டன.

கடந்த 2024, 2025 ஏப்ரல் வரையான காலப் பகுதிகளுக்குரிய 50 க்கு மேற்பட்ட வழக்குகளுடன் தொடர்புடைய கஞ்சா உள்ளிட்ட பல்வேறு சான்றுப் பொருட்களே, வழக்குகள் நிறைவடைந்த நிலையில் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்துவரப்பட்ட குறித்த பொருட்கள் மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் எரித்து அழிக்கப்பட்டன. (ம-4,7,250)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 11.05.2025 முதல் 26.05.2026 வரை

60/100



தனுசு இராசி நேயர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 11.5.2025 அன்று 7 ஆம் இடமான களத்திர ஸ்தானத்திற்கு அடியெடுத்து வைக்கிறார். அங்கிருந்து கொண்டு நேரடியாக உங்கள் இராசியைப் பார்ப்பதால், "குரு பார்க்க கோடி நன்மை" என்பதற்கேற்ப இனி உங்களுக்கு நல்ல காலம் தொடங்கிவிட்டது. தொட்டது துலங்கும் தொடர் முன்னேற்றம் ஏற்படும். வருமானம் திருப்தி தரும்.

கிரகங்களில் சுப கிரகமாக விளங்கும் குருவின் பார்வை நேரடியாக உங்கள் இராசியில் பதிவதால் எதிர்பார்ப்புகள் யாவும் நிறை வேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும். உடல் நலத்தில் இருந்த குறைபாடுகள் அகலும். உங்கள் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் வழிகாட்டுவர்.

குருவின் பார்வை 3ஆம் இடத்தில் பதிவதால் அண்ணன், தம்பிகளுக்குள் இருந்த அரசல் புரசல்கள் மாறும் ஒற்றுமை பலப்படும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், குடும்பச் சுமை கூடுதலாக இருந்தாலும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. எதிலும் ஈடுபடும் முன் கொஞ்சம் யோசித்து செயற்படுவது நல்லது. உத்தியோகத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும்.

குருவின் பார்வை 11 ஆம் இடத்தில் பதிவதால் கொடுக்கல்- வாங்கல்களில் இருந்த தடுமாற்றங்கள் அகலும். தொழில் ...

திருவாதிரை நட்சத்திரக் காலில் ராகு சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது குடும்பச் சுமை கூடும். கொடுக்கல்-வாங்கலில் நம்பிக்கைக்குரியவர்களால் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். வளர்ச்




சியில் குறுக்கீடுகள் அதிகரிக்கும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு வீண்பழிகள் ஏற்படலாம். அதன் விளைவாக பொறுப்புகள் மாற்றப்படும். தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருக்க வேண்டிய நேரமிது.

8.8.2025 முதல் 25.5.2026 நடைபெற்ற தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும். வீடு, வாகனம், நிலம் வாங்கும் யோகம் உண்டு. அதே நேரம் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பும் வந்து சேரும். செய்தொழிலில் உங்கள் திறமை பளிச்சிடும். உங்களிடம் இருந்த இடத்தை அதிக விலைக்கு விற்று, அதன்மூலம் கடனை அடைத்து புதிய தொழிலும் தொடங்குவீர்கள். தொழிலில் பழைய பங்குதாரர்கள் உங்களை விட்டு விலகினாலும் புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதாரம் உயர வழி வகுத்துக் கொடுப்பர்.

### சனிப்பெயர்ச்சி

6.3.2026 அன்று சனிபகவான் கும்ப இராசியில் இருந்து மீன இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். இப்பொழுது உங்களுக்கு அர்த்தாஷ்டமச் சனி வருகிறது. இது ஒரு சோதனைக் காலமாகும். தன்னம்பிக்கை குறையும். தடைகள் அலைமோதும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. இடமாற்றங்கள், இலாகா மாற்றங்கள் ஏற்பட்டாலும் அவை இனிமை தரும் விதம் அமையாது. வியாபாரப் போட்டிகள் அதிகரிக்கும். வீடுமாற்றம், நாடு மாற்றம், உத்தியோக மாற்றம் என மாற்றங்கள் பலவும் வந்த வண்ணமாகவே இருக்கும். கூட்டு முயற்சிகளிலிருந்து விலகி தனித்து இயங்க முற்படுவீர்கள்.

## ஏழாம் இடம் வந்தது குரு! இல்லற வாழ்வு இனிஅமையும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

### குரு இருக்கும் இடத்தின் பலன்

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், 4 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர், குருபகவான் அவர் சப்த ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது ஆரோக்கியம் சீராகும் உற்சாகத்தோடு பணிபுரிந்து இழந்த வாய்ப்புகளை மீண்டும் பெறுவீர்கள்.

எதிரிகள் விலகுவர். உதிரி வருமானங்கள் வந்து உள்ளத்தை மகிழ்விக்கும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க வேண்டுமானால் குரு அருள் நமக்குத் தேவை. அந்த வகையில் குருவின் பரிபூரண அருளுக்குப் பாத்திரமாக விளங்குவீர்கள். இது போன்ற நேரங்களில் உங்கள் இராசிக்கு அனுகூலம் தரும் நலங்களைத் தேர்ந்தெடுத்து, வரம் தரும் நாளில் சென்று வழிபட்டு வந்தால் நிரந்தரமாக உங்களுக்கு நன்மை கிடைக்கும்.

### குருவின் பார்வை பலன்

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவானுடைய பார்வை உங்கள் இராசிக்கு 1, 3,11 ஆகிய இடங்களில் பதிகிறது. நவக்

... கல்களில் இருந்த தடுமாற்றங்கள் அகலும். தொழில் சூடுபிடிக்கும். இலாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து சுய தொழில் தொடங்கலாமா என்று சிந்திப்பர். நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். வெளி நாட்டிலுள்ள நல்ல நிறுவனங்களில் இருந்தும் ஆதரவு கிடைக்கும்.

### நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்

11.5.2025 முதல் 9.6.2025 வரை மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது கொஞ்சம் விரயங்கள் கூடுதலாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் தடுமாற்றங்கள் ஏற்படும். பயணங்களால் அலைச்சல் ஏற்படுமே தவிர ஆதாயம் கிடைக்காது. கடமையில் தொய்வு ஏற்படும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்ட படியே செய்ய முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்கள், இது போன்ற நேரங்களில் குரு வழிபாடும், அங்காரக வழிபாடும் தேவை. 10.6. 2025 முதல் 7.8.2025 வரை புனர்பூசம் நட்சத்திரக் காலில் தன் சுய சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது மிக அற்புதமான பலன்கள் வந்து சேரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். புகழ்பெற்ற மனிதர்களின் உதவி கிடைக்கும். பிரச்சினைகளில் இருந்து விடுபட மாற்றினத்தவர்கள் வழி காட்டுவர். வழக்குகளில் திருப்பம் ஏற்படலாம். முன்னேற்றப் பாதையில் இருந்த குறுக்கீடுகள் அகலும். பொன் பொருள் சேர்க்கை உண்டு. புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

### குருவின் அதி சாரப் பெயர்ச்சி

8.10.2025 அன்று குருபகவான் கடக ராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசிக்கு 2, 4, 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும். கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள். கொடுக்கல்- வாங்கல்கள் சீராகவும், சிறப்பாகவும் அமையும். இதுவரை சிக்கனத்தைக் கையாண்ட நீங்கள் இப்பொழுது செலவு செய்யத் தயங்கமாட்டீர்கள். வாடகைக் கட்டடத்தில் ...

### பெண்களுக்கான பலன்கள்

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக அதிகமான நற்பலன்களைப் பெறப்போகிறீர்கள். பொருளாதார நிலை உயரும். வீடு வாங்க, விற்க எடுத்த முயற்சி கைகூடும். கடமையைக் கண்ணும், கருத்துமாகச் செய்து வெற்றி பெறுவீர்கள். கணவன்- மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். புகழ்மிக்க ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வர வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும். கல்விக்காகவோ, கலைக்காகவோ எடுத்த முயற்சி கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு.

(தொடரும்)

## மோ.சைக்கிள்...

மேற்படி இளைஞன் மோட்டார் சைக்கிள் ஒன்றின் பின்னிருக்கையில் இருந்து கொண்டு பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியால் சென்றபோது நீர்வேலிப் பகுதியில் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இரு மோட்டார் சைக்கிள்களிலும் பயணம் செய்த நால்வர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் மூவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில் மேற்படி இளைஞர் சிகிச்சை பலனின்றி நேற்று திங்கட்கிழமை (19) உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (ம-7,4,33,60,104)

## அசைவ உணவக...

திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்திற்கு எதிரான கவனயீர்ப்புப் போராட்டத்தில் அனைத்து சைவ சமயிகளும் அணிதிரண்டு எதிர்ப்பைப் பதிவு செய்யுமாறு அகில இலங்கை சைவ மகா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம-4,7,33)

## மழை, மின்னல்...

பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், மழை அனர்த்தத்தால் நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/03 கிராமசேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஜே/06 கிராம சேவகர் பிரிவில் அடிப்படைக் கட்டமைப்பு ஒன்றும் சேதமடைந்துள்ளது.

இதேநேரம் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/356 கிராமசேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மழையால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அத்துடன் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/304 கிராமசேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

ஜே/328 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

மேலும் ஜே/305 கிராமசேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மின்னல் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகத் தெரிவித்தார். (ம-7,4,33)

## முள்ளிவாய்க்...

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 16ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு தமிழினப் படுகொலைக்கு நீதி கோரி பிரித்தானியாவில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பிரித்தானிய பாராளுமன்றத்திற்கு முன்பாக இடம்பெற்ற இப்போராட்டத்தில் நீதி கோரி கோசங்கள் எழுப்பப்பட்டதுடன் தமிழினப் படுகொலை தொடர்பான ஆவணங்களும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இப்போராட்டத்திற்குப் பல பகுதிகளில் இருந்தும் பெருமளவான மக்கள் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## மனித குலத்...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இன்று நாங்கள் தமிழ் இனப்படுகொலை தினத்தை நினைவுகூருகின்றோம். தமிழ் மக்களிற்கு எதிராக இலங்கை அரசாங்கம் பாரிய இனப்படுகொலையில் ஈடுபட்ட யுத்தத்தின் 16வது வருட நிறைவை நினைவுகூருகின்றோம்.

உயிர் தப்பிய பலர் கனடாவிற்கு பாதுகாப்பிற்காகத் தப்பியோடி வந்தனர். நாங்கள் இழக்கப்பட்ட உயிர்களைச் சிதறடிக்கப்பட்ட குடும்பங்களை, நிரந்தரமாகப் பாதிக்கப்பட்ட சமூகங்களை நினைவுகூருகின்றோம்.

இந்த வலியின் சுமையையும் அன்புக்குரியவர்களின் நினைவுகளையும் தொடர்ந்து சுமக்கும் பிரம்டன் மற்றும் கனடா தமிழ்ச் சமூகத்துடன் உறுதியாக . இணைந்திருக்கின்றோம். பிரம்டன் தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபியின் இருப்பிடம் என்பதால் இந்த வருடம் பிரம்டனிற்கு மிகவும் விசேடமானது. இது ஒரு சக்தி வாய்ந்த நினைவுச்சின்னமாகும்.

இந்த நினைவுச்சின்னம் கடந்த காலத்தை நினைவூட்டுவதாகவும் உண்மை, பொறுப்புக்கூறல் மற்றும் அமைதியின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட எதிர்காலத்திற்கான அழைப்பாகவும் விளங்குகின்றது.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் யுத்தக் குற்றவாளிகள் இறுதியாக மனித குலத்திற்கு எதிரான குற்றங்களிற்காகப் பொறுப்புக்கூறச் செய்யப்படும் ஒரு நாளை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

நீதிக்காகவும் நினைவுகூரலிற்காகவும் ஒற்றுமையுடன் ஒன்றாக நிற்பதற்கும் எங்களை அர்ப்பணிப்பதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களைக் கௌரவிப்போம். இன்றும் எப்போதும். (ம-7,4)

## நீதி...

ரணைகளை முன்னெடுப்பதற்கும் தவறியிருக்கின்றன.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கமேனும் கடந்தகால அரசாங்கங்களின் தோல்விகளை சீர்செய்து, நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுமா? என சர்வதேச மன்னிப்புச்சபை கேள்வி எழுப்பியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசாப்த கால யுத்தம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டு, 16 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், இது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையின் உத்தியோகபூர்வ "எக்ஸ்" தளத்தில் செய்யப்பட்டிருக்கும் பதிவில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 16 வருடங்கள் பூர்த்தியாகும் ஞாயிற்றுக்கிழமை (18) இல் முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் ஒன்றுகூடினர்.

வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் உள்ளடங்கலாக யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் பதிவான சர்வதேச சட்டங்களுக்குப் புறம்பான மிகமோசமான மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் இன்னமும் நீதியையும், பொறுப்புக்கூறலையும் கோரி வருகின்றனர்.

இருப்பினும் அத்தகைய குற்றங்கள் எவையும் இடம்பெறவில்லை என இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் மறுத்துவந்திருப்பதுடன், நம்பத்தகுந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் தவறியிருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போதைய புதிய அரசாங்கமேனும் கடந்தகால அரசாங்கங்களின் தோல்விகளைச் சீர்செய்து, நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுமா? அத்தோடு பாதிக்கப்பட்ட தரப்பினரின் நீதிக்கான கோரிக்கைக்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்க வேண்டும் என அப்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,4)


மஹஜன சம்பத
திகதி 2025.05.19
சீட்டிழுப்பு இலக்கம் 5834
V 9 5 8 5 3 9
அத சம்பத V 8 5 3 9
சீட்டிழுப்பு இலக்கம் 409
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.05.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1864
E 10 17 56 79 E
Double Chance 20069

மெகா பவர்
திகதி 19/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2182
T 21 20 32 45 54

ஜய
திகதி 2025.05.19
சீட்டிழுப்பு இலக்கம் 102
E 1 2 9 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4076
சீட்டிழுப்பு திகதி 19.05.2025
X 08 10 32 43
X
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.19
சீட்டிழுப்பு இலக்கம் 1143
சிம்மம் 01 14 39 40 சிம்மம்
07043 27

உத்தியோகபூர்வ முடிவுகள்
19.05.2025 வெற்றி வாரம் 542
ஆங்கில எழுத்து X
7 0 1 8 1 1
57004
ரூ.37,503,780.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2808
சீட்டிழுப்பு திகதி 2025.05.19 தினம் திங்கட்கிழமை
19 21 35 67 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,748,078.40

சனிதா
திகதி 19.05.2025 வெற்றி வாரம் 4969
25 31 61 78 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,148,994.00
58735

ஜயோதா Jayoda
திகதி 2025.05.19 வெற்றி வாரம் 2127
29 40 65 67 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,387,803.20

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4520
சீட்டிழுப்பு திகதி 19.05.2025 தினம் திங்கட்கிழமை
14 27 45 55 மீனம்
ரூ.3,686,132.00
269047

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 15 32 52 54 69
அடுத்த சுப்பர் ஜக்பொட்
1984
19.05.2025 திங்கட்கிழமை

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2634
சீட்டிழுப்பு திகதி : 2025.05.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,538,544.80
20 31 35 36 X
959289

# உப்பு தட்டுப்பாட்டிற்கு விரைவில் தீர்வு எட்டப்படும்

## அமைச்சர் வசந்த சமரசிங்க

(கொழும்பு)

நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமான அளவு உப்பு உற்பத்தி செய்யப்படுவதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எதிர்பாராத மழையால் உப்பு அறுவடை உருகி, இடையூறுகள் ஏற்பட்டுள்ளது.

அதன்படி, போதுமான அளவு உப்பு இறக்குமதி செய்யப்பட வேண்டியுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட உப்பு இருப்பு நாட்டிற்கு வந்து சேரும் என்றார்.

இந்நிலையில் உப்பு தட்டுப்பாட்டுக்கு நுகர்வோரின் தேவையற்ற அச்சமே காரணம் என லங்கா உப்பு நிறுவனத்தின் தலைவர் டி.நந்தனதிலக தெரிவித்துள்ளார்.

இதுதான் அவர்களை அதிகளவில் உப்பை கொள்வனவு செய்ய வழிவகுத்துள்ளதாகவும், இதனால் உப்பு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் புதன்கிழமைக்குள் போதுமான அளவு உப்பை நாட்டிற்கு கொண்டு வந்து சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ம-4,7)


## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| ➢ Data Entry | : 0768172547 |
| ➢ Waiter & Kitchen Helper | : 0764674313 |
| ➢ Room Boy | : 0761313000 |
| ➢ Receptionist | : 0770079053 |
| ➢ Photocopy ,Typing,Printing | : 0768323682 |
| ➢ House Keeping | : 0772090680 |
| ➢ நிதி சேகரிப்பு அதிகாரி | : 0760463596 |
| ➢ பண்ணை முகாமையாளர் | : 0776524970 |
| ➢ Assistant Sales Manager (Basic 60,000) | : 0779969661 |
| ➢ Part Time, Online Works | : 0765318147 |
| ➢ Chartered Accountant | : 0771298168 |
| ➢ Sales Representative | : 0773161416 |
| ➢ Accounts Assistant | : 0779104173 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக

வேலைவாய்ப்புகளுக்கு: dewmasweb.com

வேலையாட்கள் தேவையா : 0777733368

DEWMAS, 51, Amman Road, Nallur

(4335)


## உண்மையான...

எமது நாடு பல தசாப்தங்கள் யுத்தத்திற்கு முகங்கொடுத்தது. யுத்தம் எமது நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் அழிவை தந்தது. பலவருடங்களின் பின்னர் யுத்தத்தை நிறைவு செய்ய முடிந்தது. யுத்தத்தை நிறைவு செய்ய உயிர்த்தியாகம் செய்த படையினரை நாம் இன்று நினைவு கூருகிறோம். இது முக்கியமான வரலாற்றுத் தினமாகும். இது யுத்த நிறைவு தினம் மட்டுமன்றி மீண்டும் நாட்டில் யுத்தம் ஏற்படுவதைத் தடுக்க சிங்கள, தமிழ், முஸ்லிம், பேர்கர், மலே, கிறிஸ்தவர் என சகல மக்களும் ஒரே நாட்டிற்குள் ஒற்றுமையாக நாட்டைக் கட்டியெழுப்பப் போராடுகின்றனர்.

யுத்தத்தை நிறைவு செய்ய எமது படையினர் உயிர்த்தியாகம் செய்தனர். இங்குள்ள நினைவுச் சின்னம் முழுவதும் அவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. யுத்தத்தினால் பலர் அங்கவீன முற்றனர். பலர் தமது உடல் உறுப்புக்ளை இழந்தனர். அவர்களின் உறவினர், குடும்பத்தினர் பெரும் தியாகம் செய்தனர். அவர்களை நாம் தினமும் நினைவில் கொள்ள வேண்டும். அவர்களுக்கு நாடு கடன்பட்டுள்ளது.

யுத்தம் என்பது பாரிய அழிவாகும். யுத்தத்தில் போராடிய நீங்கள் யுத்தம் எந்தளவு நாசகரமானது என்பதை அறிந்திருப்பீர்கள். யுத்தம் செய்த எவரும் யுத்தத்தை தொடர்ந்து எதிர்பார்த்து போராடவில்லை. அனைவரும் சமாதானத்தை எதிர்பார்த்தே போராடினர். வடக்கு, தெற்கு பேதமின்றி பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர், கணவரை இழந்த மனைவிமார் உள்ளனர். அவர்கள் கௌரவத்துடன் நினைவுத் தூபியில் தமது உறவினர்களின் பெயர்களைத் தேடுகின்றனர். இங்கு மாத்திரமா வடக்கிலும் இதே நிலைமை தான். தமது பிள்ளைகள், கணவர்மார்களின் புகைப் படத்தை வைத்துக் கொண்டு அவர்களின் உறவினர்கள் வீதியோரம் ஒப்பாரி வைக்கின்றனர்.

அனைத்துப் பெற்றோருக்கும் தமது பிள்ளை முக்கியம். பாரிய அழிவை சந்தித்த தாய்நாட்டில் அவ்வாறான யுத்தம் மீள ஏற்படுவதை தடுப்பது எமது பொறுப்பாகும். எமது சந்ததி சண்டையிட்டது. கோபமும் குரோதமும் பரவியது. ஆனால் எமது பிள்ளைகள் வாழும் இன்றைய சந்ததியினருக்கு யுத்தம் செய்யாத,மோதல் அற்ற கோபம், சந்தேகத்திற்குப் பதிலாக நட்புறவு மற்றும் அன்புள்ள நாடு உருவாக்கப்பட வேண்டும்.

கடந்த கால சம்பவங்களில் இருந்து பாடம் கற்க வேண்டும். மீள அவ்வாறான நிலை எமது தாய்நாட்டில் ஏற்பட இடமளிக்கக் கூடாது. யுத்தமற்ற, குரோதமோ, சந்தேகமோ அற்ற நாடு உருவாக்கப்பட வேண்டும். மீண்டும் மோதல்,குரோதம் உள்ள நாட்டுக்குப் பதிலாக சமாதானமான நாட்டை உருவாக்குவதே அவர்களுக்கு நாம் செய்யும் கௌரவமாகும்.

நாம் எதிர்கால சந்ததியினருக்கு சமாதானமான நாட்டையே வழங்க வேண்டும். அதிகாரத்தை பெறவும் பாதுகாக்கவும் யுத்தம்,மோதல் மற்றும் இனவாதத்தை கடந்த காலத்தில் பயன்படுத்தினார்கள். சரத் பொன்சேகா இரண்டரை வருடங்கள் சிறையில் இருந்தார். அவர் என்ன தவறு செய்தார். அவருடன் நான் அன்று நெருக்கமாக பழகினேன்.

அதிகாரத்தைப் பலப்படுத்தவும் பாதுகாக்கவும் மேற்கொள்ளப்பட்ட யுத்தங்கள் மற்றும் மோதல்களினால் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பிள்ளைகளே பாதிக்கப்பட்டனர். யுத்தத்திற்கு எந்த காரணமும் அற்ற பங் களிக்காத கிராமத்துப் பெற்றோரின் பிள்ளைகளே இறந்தனர். அங்கவீன முற்றனர். இது தான் அதனால் கிடைத்த அழிவாகும்.

மக்களால் புறக்கணிக்கப்பட்டோருக்கு யுத்தம் என்பது இனிய அனுபவம். நாம் சமாதானத்திற்காக ஒன்றிணைய வேண்டும். ஆனால் இன்று சமாதானம் என்பது காட்டிக்கொடுப்பின் சின்னமாக மாறியுள்ளது. நல்லிணக்கம் என்பது காட்டிக்கொடுப்பாக உள்ளது. யுத்தம் ஒருபோதும் வெற்றியை கொண்டுதருவதில்லை. படை வீரர்களிடமிருக்கும் ஆயுதத்தை பயன்படுத்த தேவையற்ற அமைதியான சமூகம் உருவாக வேண்டும்.

நாம் மனிதாபிமானத்திற்கும் மனிதத்துவத்திற்குமே அடிபணிய வேண்டும். இந்த பூமி போதுமான அளவு இரத்தத்தில் தோய்ந்துள்ளது. பெற்றோரும் உறவினர்களும் அதிகமதிகம் கண்ணீர் சிந்தியுள்ளனர். யுத்தத்தின் வேதனையை அனுபவித்துள்ளோம். மீண்டும் அத்தகைய நிலை ஏற்படுவதைத் தடுக்க வேண்டும். அனைவரும் சமாதானத்திற்காகவே ஆயுதம் ஏந்தினார்கள்.

யுத்தத்தின் நிறைவு என்பது சமாதானத்தை நிலைநாட்டுவதாகும். நாம் முழுமையான வெற்றியாளர்களாக மாற சமாதானத்தை நிலைநாட்ட வேண்டும். நாம் சமாதானத்திற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கத் தயார். நாட்டின் சமாதானத்திற்காகவே படைவீரர்கள் பங்களித்தார்கள். எதிர்காலத்திலும் சமாதானத்திற்காக பங்களிப்பார்கள்.

சமாதானத்தை நிலைநாட்டுவதே இறந்த படைவீரர்களுக்கு செய்யும் கைங்கரியமாகும். இது கடினமான செயற்பாடு. வடக்கிலும் தெற்கிலும் அதிகாரத்திற்காக இனவாதம் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது. தாய்நாட்டில் உண்மையான சமாதானம் நிலைநாட்டப்படவில்லை என்றார்.(ம-4,7)


## மணப்பெண் தேவை

01. கரவெட்டி, இந்து, 1986, அத்தம், BSc(hons) in Quantity Surveying, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (29720)
02. வட்டுக்கோட்டை, இந்து, 1988, பூசம், Data Analysis, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (45522)
03. kks, இந்து, 1993, விசாகம், Masters, Canada Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(43203)
04. திருநெல்வேலி, இந்து, 1986, கேட்டை, BSc, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (48612)
05. இணுவில், இந்து, 1990, அனுஷம், Quantity Surveyor, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (34984)
06. நீர்வேலி - புலோலி, இந்து, 1991, பூரட்டாதி, BSc, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (32143)
07. காரைநகர், 1989, இந்து, சித்திரை, Bachelors, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (41733)
08. கொக்குவில் - உடுவில், இந்து, 1988, திருவோணம், Civil Engineer, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (52796)
09. சங்கானை - கோண்டாவில், இந்து, 1987, ரேவதி, MSc in Engineering, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (43866)
10. வட்டுக்கோட்டை, இந்து, 1992, விசாகம், CIMA Qualified, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (33308)

எம்மிடம் எல்லா நாட்டிலும் எல்லா ஜாதியிலும், Unmarried மற்றும் Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

(C-3010)

S.Sharma J.P | www.thaalee.com | 077 539 3728

## சணல் ஆடுகள் விற்பனைக்கு

பால் ஆடு கடாய்க் குட்டியுடன்
மூன்று மாதம் 80,000/=
கன்னி ஆடு 60,000/=
ஒரு வயது கடாய் 80,000/=

076 223 3096
076 234 6416

(4332)

## வேலையாட்கள் தேவை

கொடிகாமம் நகரில் உள்ள Multy Shop (Fancy Shop) ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.

(C-3009)

077 811 8948

## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3970/- |
| 11-16 Kg | 2800/- |
| 21-30 Kg | 2640/- |

✔ குறைந்த விலை -நிறைந்த சேவை
✔ கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
✔ 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237 (C-3007)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3006)

076 825 7716 (ஆகாஸ்)

## தேவை

யாழ். பல்கலைக்கழகம் முன்பாக இயங்கும் Printing கடை ஒன்றிற்கு

♦ போட்டோகொப்பி ♦ வடிவமைப்பு (Designing)
♦ ரைப்பிங் (Typing) தெரிந்தவர்கள் தேவை.

குறிப்பு : - மாநகர எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. பெண்கள் மட்டும்.

(4333)

தொடர்புகளுக்கு : 071 847 4643

Fine Graaphics

No.188, Ramanathan Road, Jaffna.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாப[illegible] இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.